விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1487)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 10 திங்கட்கிழமை (22.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 065

## அனைத்து தமிழ்க் கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்க முடிவு

### தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைத்து தமிழ் தேசியப் பேரவை உருவாக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றைய தினம் இடம்பெற்றது. ▶19

## யாழ்.சிறைக் கைதி உட்பட வடக்கில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதி ஒருவர், ஆசிரியை உள்ளிட்ட ஆறு பேருக்கு வடக்கில் நேற்று கொரோனாத் தொற்று உறுதி ▶19

### விபரீத முடிவெடுத்த
## இளம் பெண் உயிரிழப்பு
### மூளாயில் சம்பவம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் வசித்து வந்த யுவதி ஒருவர் கடந்த ▶19

### ஐ.நா கூட்டத் தொடர் ஆரம்பம்

# இலங்கை குறித்து நாளை விவாதம்

## கொழும்பில் இருந்து இணையவழியூடாக தினேஷ் குணவர்த்தன உரையாற்றுவார்

*(கொழும்பு)* ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

இந்நிலையில் இலங்கை தொடர்பில் நாளை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கொழும்பில் இருந்து இணையவழியூடாக ஜெனிவா அவையில் உரையாற்றவுள்ளார். *(03ஆம் பக்கம் பார்க்க)*



### கோவிட்டால் நேற்றும்
## 10 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 10 பேர் ▶19

### பருத்தித்துறையில்
## ஆசிரியைக்கு கொரோனா

(கரணவாய்)

யாழ். வடமராட்சி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கு ▶19

### யாழ்.நகரிலுள்ள
## தொலைத்தொடர்பு நிலைய பணியாளருக்கு
### கோவிட் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ.நகரிலுள்ள தொலைதொடர்பு நிறுவனத்தின் வாடிக்கை ▶19

## தொண்டைமானாறு கடலில் மூழ்கி மாணவன் பலி



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சின்னக் கடலில் குளித்துக் கொண்டிருந்த மாணவன் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள் ▶19

## சந்திரிகா, மைத்திரி, சஜித் ஆகியோரை இணைத்து ஐ.நா சவாலை எதிர்கொள்க

### அரசுக்கு எதிர்க்கட்சி அறிவுரை

(கொழும்பு)

"இறுதிக்கட்டப் போரின்போது 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்க முடியாது. அத்துடன், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன ▶19



## பட்டப்பகலில் வீடு உடைத்து 16 பவுண் நகை திருட்டு

### பண்ணாகத்தில் துணிகரம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - பண்ணாகத்தில் பதினாறு பவுண் நகையும் ஐயாயிரம் ரூபாய் பணமும் களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகை ▶19

## பிரஜாவுரிமையை பறித்தாலும் போராட்டம் தொடரும்

### ஜே.வி.பி அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

"ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் குரலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஒடுக்க முடியாது. பிரஜாவுரிமையை இல்லாது செய்தாலும், எம்மைச் சிறையில ▶19

### முல்லைத்தீவில்
## மாணவனுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவருக்கு கொரோ ▶19

### மரணச் சடங்கில்
## ரூ.2 லட்சம் பணம் திருட்டு
### அச்செழுவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அச்செழுப் பகுதி ▶19

## சர்வதேச சக்திகளின் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை

### வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கும் தகைமை இலங்கை அரசுக்கு உள்ளூதாக வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ▶19



### அனைத்து அரச பாடசாலைகளுக்கும் 25ஆம் திகதி தொடக்கம்
## விடுமுறை அறிவிப்பு

9ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 – 10 – 1940



மறைவு
21 – 02 – 2021

## சண்முகம் நல்லையா

இத்தியோடை, இமையாணனைப் பிறப்பிடமாகவும் முடக்காடு, நெல்லியடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நல்லையா நேற்று (21.02.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மூத்தார் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் கார்த்திகேசுவின் அன்புச் சகோதரரும் சுமதி, அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ராஜலக்சுமி, கிருஸ்ணபிள்ளை, செல்லையா மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயரட்ணம் (கட்டி), கொன்சலா (றெஜி), முரளி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வேலாயுதம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரரும் Dr. கமலநாதன் (பதில் வைத்திய அத்தியட்சகர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), கமலராணி, கமலராஜா, கமலதீபன், துஸ்யந்தி, சுரேஸ், சுகந்தி, சுகன்யா, சுரேன் ஆகியோரின் பெரிய தந்தையும் நிதர்சன், துர்கா, கீர்த்தனா, தாட்சாயினி, அபிஷாயினி, ஸ்ரேபிகா, லக்ஷாந் ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.02.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடக்காடு,
நெல்லியடி கிழக்கு.

077 873 7115 (C-1502)

தகவல்:-
குடும்பத்தினர்

# நெடுந்தீவுக் கடலில் இருவர் மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு, குறிகட்டுவானில் இருந்து நேற்று மதியம் 1 மணியளவில் நெடுந்தீவுக்குப் பயணமான படகு ஒன்றில் பயணித்த இருவர் காணாமல்போயுள்ளதாகவும், ஆட்களற்ற நிலையில் படகு நெடுந்தீவில் கரையொதுங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் படகில் பயணித்தவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. (ஞா)

# மரண அறிவித்தல்



## தமியாம்பிள்ளை மரியாம்பிள்ளை

இத்தாவில், பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தமியாம்பிள்ளை மரியாம்பிள்ளை நேற்று (21.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தமியாம்பிள்ளை - லேனு தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற மேரி றோசாவின் அன்புக் கணவரும் சத்தியசீலன், அன்ரனீஸ், காலஞ்சென்ற அருள்தாஸ், மற்றும் புஷ்பமலர், பிறேமதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருத்தினீஸ், மரியம்மா, அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரனிக்கா மற்றும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, வஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் கிறிஸ்ரில்டா, ஞானசீலன், கோமவதனி, அருள்சோதி ஆகியோரின் அன்பு மாமனாரும் சறோன் கிறிஸ்ரின், ஜெரன்சி, லங்கினி, கேருஜன், லிவின்சன் , தக்சிகன், கிருஸ்ரினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (22.02.2021) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் இத்தாவில் புனித பார்பரம்மாள் ஆலயத்தில் நடைபெற்று இத்தாவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். (5871)

இத்தாவில்,
பளை.

தகவல்:-
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## விநாசித்தம்பி புஷ்பநேசன்

கடந்த 23.01.2021 அன்று இறைபதம் அடைந்த, கச்சாய் வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விநாசித்தம்பி புஷ்பநேசன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு 22.02.2021 இன்று திங்கட்கிழமை வெள்ளாம் போக்கட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில்
04.05.1967

விண்ணில்
23.01.2021

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

(C-1501)

# ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு இந்தியாவிற்கு விடுக்கப்பட்ட அழைப்பு

## இதுவரை பதிலளிக்காத மோடி அரசு

(கொழும்பு)

**ஜெனிவாவில் உள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு எதிராக ஆதரவளிக்குமாறு இலங்கை விடுத்த அவசர கோரிக்கைக்கு இந்தியா இன்னும் முறையாக பதிலளிக்க வில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஜெனிவா தொடர்பில் இலங்கை, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு சிறப்பு கோரிக்கை கடிதத்தை அனுப்பியதாக தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை இந்தியாவின் ஆதரவைக் கோரியுள்ளதாகவும் எனினும், இந்தக் கோரிக்கைக்கு இந்தியா இன்னும் முறையாக பதிலளிக்கவில்லை என்று கொலம்பகே தெரிவித்தார்.

அண்மைய நாட்களில் சில சம்பவங்கள் நடந்த போதிலும், இந்தியா சாதகமான பதிலை அளிக்கும் என்று இலங்கை நம்புவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஜெனிவாவில் உள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் ஒரு தீர்மானத்தை முன்வைக்க இலங்கை தொடர்பான இணை அனுசரணை குழு விரும்புகிறது.

ஆசிய நாடுகள் மற்றும் பிற நாடுகளின் தீர்மானத்திற்கு எதிராக இலங்கை ஆதரவு கோரி வருகிறது.

எனினும், கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்தை நிர்வகிக்க இந்தியா மற்றும் ஜப்பானை அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதற்கு இலங்கை முடிவு செய்ததை அடுத்து இந்தியாவுடனான இலங்கையின் உறவு சீர்குலைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

## ஐ.நா.கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

### இலங்கை குறித்த விவாதம் நாளை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில் உலக நாடுகளின் மனித உரிமை நிலை குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த நிலையில், நாளை காலையில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கொழும்பில் இருந்து இணைய வழியூடாக உரையாற்றவுள்ளார்.

தினேஷ் குணவர்த்தன உரையாற்றும்போது ஐக்கிய நாடுகள்மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை நிராகரிப்பார் என்றும் அது தவறான தகவல்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை அரசாங்கமானது அந்த அறிக்கையை நிராகரித்து 18 பக்க அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 31ம் நாள் நினைவஞ்சலி

## அமரர் அருளம்பலம் பத்மநாதன்

தோற்றம் 10 . 10 . 1942



எங்கள் பாசத்திற்குரிய சகோதரனும் தாய்மாமனுமாகிய
**அமரர் அருளம்பலம் பத்மநாதன்**
அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

சிறுவயதில் இருந்தே எங்களின் உயர்விற்காக பல வழிகளிலும் உரிமையுடன் நின்று உதவிகள் புரிந்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் அருளம்பலம் பத்மநாதன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திப்பதுடன் 31 ஆம் நாள் நினைவு நாளாகிய இன்று (22.02.2021 திங்கட்கிழமை) கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்லம், முல்லைத்தீவில் அமைந்துள்ள பாரதி சிறுவர் இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்களிற்கு உணவு உபசாரமும் வழங்கப்படுகின்றன.

மறைவு 23 . 01 . 2021


தகவல்:

சகோதரர்கள் - திருமதி.மங்கையக்கரசி நாகராஜா (நோர்வே), திரு.அருளம்பலம் உலகநாதன் (கனடா)
மருமக்கள் - பாலா (பிரான்ஸ்), ரதி (நோர்வே), வனிதா (கனடா), வட்ஸ்சலா (கனடா),
சூரி (நோர்வே), வாசுகி (நோர்வே), ஜனகன் (நோர்வே), சாங்கர் (சுவிஸ்)

(5863)

# இருபது-20 உலகக் கிண்ணம் எமிரேட்ஸில் நடத்த வேண்டும்

## பாகிஸ்தான் வலியுறுத்து




இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள இருபது-20 உலகக் கிண்ணத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு இட மாற்றம் செய்ய வலியுறுத்துவோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

7 ஆவது ஐ.சி.சி. இருபது-20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந் நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் எஹ்சன் மணி, லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களிடம் உரையாற்றும்போது,

இருபது -20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்க வேண்டும் என்றால் விசா வழங்குவதில் எழுத்துப்பூர்வமான உறுதிமொழியை இந்தியா எங்களுக்கு மார்ச் மாத இறுதிக்குள் வழங்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்திடம் கூறியுள்ளோம்.


வீரர்களுக்கு மட்டுமல்ல, பாகிஸ்தான் ரசிகர்கள், நிர்வாகிகள், பத்திரிகையாளர் ஆகியோருக்கும் விசா கொடுப்பதில் எழுத்துப்பூர்வ உத்தரவாதம் வேண்டும்.

இதை இந்தியா செய்ய தவறினால் அதன் பிறகு



நாங்கள் இந்த போட்டியை இந்தியாவில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு மாற்றக்கோரி அழுத்தம் கொடுப்போம் என்றார். (4)

## ஜெயசூரியவிற்கு தடுப்பூசி



இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரியவிற்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அதிகளவு பாதிக்கப்படக்கூடிய பகுதி என தெரிவு செய்யப்பட்ட பகுதியில் சனத் ஜெயசூரிய வாழ்ந்திருந்தால் அவரை தெரிவு செய்து தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இங்கிலாந்து- இந்தியா இருபது-20

## இந்திய அணி அறிவிப்பு




இங்கிலாந்துக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. டெஸ்ட் போட்டிகள் முடிந்ததும் 5 இருபது 20 போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் பங்கேற்கும் இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் விராட் கோலி (கப்டன்) ரோகித் சர்மா ( துணை கப்டன்), கேஎல் ராகுல், ஷிகர் தவான், ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், ஹர்திக் பாண்ட்யா, ரிஷப் பண்ட், இஷன் கிஷான், யுஸ்வேந்திர சகால், வருண் சக்ரவர்த்தி, அக்சர் படேல், டி நடராஜன், வாஷிங்டன் சுந்தர், திவேதியா, புவனேஷ் குமார், தீபக் சகார், ஷர்துல் தாகூர், ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தியா- இங்கிலாந்து இடையேயான முதல் இருபது-20 போட்டி வரும் மார்ச் 12 ஆம் திகதி தொடங்க வுள்ளது. (4)



# பல நாள் கனவு நிறைவேறி விட்டது

ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ராபின் உத்தப்பா உருக்கமான வீடியோ ஒன்றை தமிழில் பேசி வெளியிட்டுள்ளார்.

கடந்த முறை ஐ.பி.எல் தொடரில் மோசமான தோல்விகளை சந்தித்த சென்னை அணி, இந்த முறை நிச்சயமாக பலம் வாய்ந்த இளம் வீரர்களுடன் களமிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், ஐ.பி.எல். ஏலத்தில், சென்னை அணியின் ஏலப்பட்டியல் சில ரசிகர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை.

குறிப்பாக பலரும் மக்ஸ்வெல் அல் லது ஸ்மித் இருவரில் ஒரு வரை நிச்சயமாக சென்னை அணி எடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மேலும் தனது பல நாள் கனவு தற்போது நிறைவேற்றப்பட்டது எனவும் தெரிவித்தார். (4)

# ஆஸி ஓபன் டென்னிஸ்; இரட்டையர் பட்டத்தை

## வென்றனர் டோடிக்,போலசெக்

இவான் டோடிக் மற்றும் பிலிப் பொலசெக் ஆகியோர் அவுஸ்திரேலிய கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை வென்றனர்.

அவுஸ்திரேலிய ஓபன் ஆண்கள் இரட்டையர் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ராஜீவ் ராம் மற்றும் ஜோ சாலிஸ்பரி ஆகியோரை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்து கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற 35 வயதான போலசெக்கிற்கு இது முதல் கிராண்ட்ஸ்லாம் வெற்றியாகும்.

அதே நேரத்தில் குரோஷியாவின் டோடிக், மார்செலோ மெலோவுடன் 2015 பிரெஞ்சு ஓபனை வென்ற பிறகு தனது இரண்டாவது ஆண்கள் இரட்டையர் பட்டத்தை வென்றார். (4)



# அபிவிருத்தித் திட்டங்களையே சீனா முன்னெடுக்கிறது

# இது குறித்து இந்தியா அஞ்சத் தேவையில்லை

## என்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

**இலங்கையில் சீனா அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றதே தவிர இராணுவக்குவிப்பினைச் செய்யவில்லை. ஆகவே இந்தியா தேசிய பதுகாப்பை முன்னிலைப்படுத்தி அச்சமடைய வேண்டியதில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரகேசர தெரிவித்தார்.**

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் இந்தியாவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் ரீதியில் சீனாவின் தலையீடுகள் உள்ள காரணத்தால் இந்தியாவை ஓரங்கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

அவ்வாறு எந்த நாட்டினதும் நேரடி அரசியல் தலையீடுகள் எமக்கில்லை, சீனாவுடன் நாம் நல்லதொரு நட்புறவில் உள்ளோம் என்பதற்காக இந்தியாவுடன் நட்புறவை நாம் முறித்துக்கொள்ளவில்லை. அவர்களுடனும் வர்த்தக, கலாசார ரீதியிலான உறவு கையாளப்படுகின்றது. ஆனால் இந்தியா இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட முயற்சிகள் எடுத்தால் அதுவே உறவை முறிக்கவும் காரணமாக அமைந்துவிடும். அதுமட்டுமல்ல இலங்கை - இந்திய உறவு 13 ஆம் திருத்தத்தில் தங்கியிருக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் நாட்டிற்கு உகந்த, இலங்கையால் சமாளிக்கக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

### நாடுகளை பாதுகாக்க அரசு தவறிவிட்டது



(கொழும்பு)

இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறிவிட்டதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

லுணுகம் வெஹெரயில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் என்ற போர்வையில் தற்போது பெருமளவில் காடழிப்பு இடம்பெற்று வருகிறது.

இயற்கை வளங்களின் பெறுமதியை அரசாங்கம் உணராமல் செயற்படுகிறது.

வனஅழிப்புக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (நி-4)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் **திரு.ஷாம்** அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.**சிறில் விஜயரட்ணம்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.

(56612)

## ஆறாம் ஆண்டு நினைவு

அமரர்.திருமதி.சோதிலிங்கம் சுபகரி



நீ எங்களை விட்டுப்போய்
– ஆண்டுகள் ஆறு
ஆனால் நாம் சோகமெனும்
ஆற்றை – இன்னும் கடக்கவில்லை
சோதனைகள் மத்தியில்
சாதனை படைத்த – எம் சுபா!
உன் சோதியையும் உன்
பிள்ளைச் செல்வத்தையும்
விட்டு விட்டு விண்ணகம்
சென்றுவிட்டாயே!
உன் சோதி இப்போது
உருக்குலைந்து போய்விட்டான்
உன் பிள்ளைகள் அன்னையின்
அரவணைப்பின்றி அலறும் காட்சி
– உன் கண்ணான
கணவன் இதயத்தில் வருட
கண் கலங்க வைக்கிறது
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும் தூய உள்ளமுடன்

அன்னை மடியில்:- 06.02.1971
ஆண்டவன் பிடியில்:- 22.02.2015

உன் கணவன் சோதி
பிள்ளைகள்:-வசந்த்,கம்ஷனா
இலங்கை-பிரித்தானியா (London)

(56672)

உ
சிவமயம்
ஓம் நமசிவாய

## பாதார விந்தம் அடைதல்

அமரர்.
கயிலாயபிள்ளை கெஜரெத்தினம்



ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிலை
யுடைத்தாய வாழ்க்கை யொழித்தவம்
அடங்கு மிடங்கருதி நின்றிரெல்லா
மடிக ளடி நிழற்கீ ழாளாம் வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவி யெங்குங்
கெழுமனைகள் தோறு மறையின் னொலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

"சம்பந்தப் பெருமான் வாக்கு"

சைவத் திருமுறையின் கருவூலமாய் சைவ வாழ்வதனையியே நூற்று ஆறு (106) ஆண்டுகளாய் புத்திரர் பௌத்தர் போற்றுமித்திரர் களையும் அத்தனார் வழியொழுக ஆன திருமுறை வாழ்வில் ஆலயங்கள் தோறும் திருவாசகம், திருமுறைகளையும் தினந்தோறும் அனுட்டித்து பூரணத்துவம் கண்டு பொங்கு மருளோங்கி தவமைந்தன் தவராசா (செயலாளர், வேலணை பிரதேச சபை, அகில இலங்கைத் திருமுறை உறுப்பினரும்) தரணியிலே தந்து தவமான திருமுறைக்கு அடிவணங்க உத்தம குணத்தராய் உவந்து முன் வாழ்ந்து வித்தகமாய் இணைந்தீரோ சிவன் அடியை என்றும்!

வாழ்வாவது மாயம் மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதாள்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுறு நின்றான்றிருக் கோதாரமெ னீரே

"சுந்தரர் வாக்கு"

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல சிவப்புரம் பொருளோடு ஐக்கியமாகி மேலான நிலையை அடைய ஈழத்துச் சிதம்பரத்தை பிரார்த்திக்கின்றேன்.

*க.கு.க.சிவபாலன்* (K.K.K.)
*அகில இலங்கைத் திருமுறை மன்றம்,*
*பொருளாளர்.*

(C-1499)

# யாழ். கலாசார மத்திய நிலையம் விரைவில் மாநகர சபை பொறுப்பேற்கும்

## யாழ். மாநகர முதல்வர்



(நல்லூர்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாண நகரின் மத்தியில் அமைக்கப் பட்டுள்ள யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தினை மத்திய அரசிடம் அதனை நிர்வகிக்க கையளிப்பதற்கு இணங்கியதன் காரணமாகவே குறித்த கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்தும் அதனை திறப்பதில் காலதாமதம் காணப்படுவதாக யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தினை கையேற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். அதிலும் குறிப்பாக கலாசார நிலையத்தினை இயக்குவதற்கான உத்தியோகத்தர்களை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

நான் மாநகர முதல்வராக பதவியேற்றதிலிருந்து முதல் பணியாக இந்த விடயத்தினை முன்னிறுத்தி செயற்படுத்தி வருகின்றேன். எனினும் குறித்த கட்டடமானது யாழ்ப்பாண மாநகர சபையிடமிருந்து பறிக்கப்படும் நிலை காணப்படுகின்ற நிலையில் அதனை யாழ். மாநகரசபை பொறுப்பேற்று நடத்துவதற்குரிய செயற்பாட்டை நான் முன்னெடுத்துள்ளேன்.

அத்தோடு அங்கே பணியாற்றுவதற்காக 67 உத்தியோகத்தர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கான முன்னெடுப்புகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அந்தக் கட்டடத்தினை நிர்மாணித்த பொறியியலாளர்களிடம் இந்தக் கட்டடத்தினை எவ்வாறு கையாள்வது, பராமரிப்பது தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்திய துணைத் தூதுவரிடம் குறித்த விடயம் தொடர்பில் பல விடயங்களை தெரியப்படுத்தி உள்ளோம். அவர்களும் குறித்த விடயம் தொடர்பில் எமக்கு ஒத்தாசை வழங்கி வருகின்றனர்.

எனினும் குறித்த கட்டடமானது வெகுவிரைவில் மாநகர சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தக் கலாசார மத்திய நிலையமானது யாழ்ப்பாண மாநகர சபையின் சொத்து மீண்டும் மாநகர சபைக்குக் கையளிக்கப்பட உள்ளது என்பதனை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார். (5-4-33)

# O⁻, A⁻ குருதி உடன் தேவை இரத்த வங்கி வேண்டுகோள்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவில் இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் குருதிக் கொடையாளர்களை குருதி வழங்குமாறு யாழ். போதனா இரத்த வங்கிப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

O negative(O⁻), A negative (A⁻) ஆகிய குருதி வகைகள் அவசரமாகத் தேவை. எனவே, இந்தக் குருதி வகைகளை உடைய குருதிக்கொடையாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அல்லது உங்களுக்கு அண்மையிலுள்ள இரத்த வங்கிக்குச் சென்று இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலதிக தகவலுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசிவேண்டி வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை மறுதினம் 24 ஆம் திகதி புதன்கிழமை உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் திருக்கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ.பாலகிஸ்ணக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை



(வரணி)

வரணி மாசேரிப்பகுதியில் அமைந்துள்ள முள்ளாவெளி வீதி பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

மாசேரிப் பகுதியின் ஊடாகச் சென்று கொடிகாமம்-பருத்தித்துறை பிரதான வீதியில் இணைகின்ற முள்ளாவெளி வீதியானது 7 கிலோ மீற்றர் நீளம் கொண்டதாகும்.

இதில் ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. மிகுதி 6 கிலோ மீற்றர் பகுதியும் புனரமைப்பு இன்றிக் காணப்படுகின்றது.

மழை காலங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியில் மழைநீர் தேங்கி நிற்கிறது. மேலும் அதிகளவான மக்கள் இவ்வீதியை போக்குவரத்திற்கு பயன்படுத்துகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மாசேரி-முள்ளாவெளி வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (5-4-103)

# சிகையலங்கரிப்பு நிலையங்கள் மூடப்படும்

(கரணவாய்)

வடமராட்சி வடக்கு, தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நாளை மறுதினம் 24 ஆம் திகதி புதன்கிழமை மூடப்பட்டிருக்கும் என சங்கத்தின் செயலாளர் பா.உதயகாந்தன் அறிவித்துள்ளார்.

சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதால் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதனை வாடிக்கையாளர்களை கவனமெடுக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (5-4-60)


# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு, தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் சங்கக்காரியாலயத்தில் சங்கத் தலைவர் சி.சுகிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் கலந்து கொள்வார்.

மேலும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பிரதீப், யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ஆ.உதயசங்கர் ஆகியோர் கலந்து கொள்வர். (5-6)



தற்போது நோயுற்ற நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழகத்தின் தமிழர் தேசிய முன்னணியின் தலைவரும் தீவிர ஈழத்தமிழர் ஆதரவாளருமான பழ.நெடுமாறன்விரைவில்நலமடைய வேண்டி சிறப்பு வழிபாடும் பிரார்த்தனையும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலும் மற்றும் மறவன்புலவு அருள்மிகு வள்ளைக்குளம் வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திலும் நேற்று முன்தினம் சிறப்பு வழிபாடும் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

# பேடன் பவல் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை கிளையால் பேடன் பவல் தினம் இன்று 22 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சங்க அலுவலகத்தில் பருத்தித்துறை மாவட்ட கிளை சங்க உப தலைவர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீட விரிவுரையாளர் ப.சிவானந்தம் கலந்து கொள்வார். (5-4)

# 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் 18 வயதிற்கும் குறைந்தோர், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார் ஆகியோரை தவிர ஏனைய அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அபாயம் மிகுந்த வலயங்களிலேயே முதலில் தடுப்பூசிகள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். (நி-4)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 12 பேர் கைது

(கொழும்பு)


கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமை தொடர்பில் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

## சேவை நலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும்

22.02.2021

திரு
**சிவசுப்பிரமணியம் சிவகுமார்**
(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்
S.L.T.S.-1- உதவி அதிபர்)



பாடசாலை சேவைக்காலம்

வ/ நெடுங்கேணி ஒலுமடு அ.த.க.பா– 26.04.1982–14.05.1989
வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி– 15.05.1989–27.04.1993
யா/ இமையாணன் அ.த.க.பா– 28.04.1993–31.12.1996
யா/ நம்பசிட்டி மெ.மி.த.க.பா– 01.01.1997–24.02.1999
யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்– 25.02.1999–27.08.2001
யா/ நம்பசிட்டி மெ.மி.த.க.பா– 28.08.2001–16.02.2013
யா/ சென். தோமஸ் றோ.க.மெ.பா– 17.02.2013–10.02.2015
யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்– 11.02.2015–21.02.2021

சிவனின் பாதம் போற்றி சீருடன்
இனிதே வாழும் சிவகுமார் என்னும்- எம்
அன்பு ஆசிரியரின் அகவை அறுபதில்
அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
விந்தை மிகு விஞ்ஞான பாடமதனை
விருப்புடன் முப்பத்தொன்பது வருடங்கள்
நிறைவாகக் கற்பித்த உம் சேவையை
நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யா/ வேலாயுதம் ம.வி, பருத்தித்துறை.

(C-1492)

## பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண சபையின் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை –2021**

1. உதவிமேற்றன் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021
2. இல்லத்தாய் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021
3. முன்பள்ளி ஆசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2021.03.12** ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்தின் குடிப்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஆணைக்குழுவின் அனுமதிக்கமைவாக**

**சி.திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவைஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**

(C-1493) 22.02.2021

## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 32 ¾செவ்.சூரி 4 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: 10ஆம் தரம்,நீர்வழங்கல் சபை குழாய் பொருத்துநர், தற்காலிகம்<br>எதிர்பார்ப்பு:சாதாரணபெண்<br>தொ.இ: B/11484 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 32 ½செவ் 12 சூரி 10 இல் உயரம்:160cm<br>தகைமை/தொழில்:. B.A, நிரந்தர அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்,அரசதொழில் முக்கியம்<br>தொ.இ:G/3618 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 23 1/4 செவ் 2 சூரி4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc Maths,National,Inter National Olympic Committe)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி.அரசஉத்தியோகம்<br>தொ.இ: B/11485 | பிறப்பு:1993இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 11செவ் 9சூரி6 இல்<br>உயரம்:5.6<br>தகைமைதொழில்:B.Aபட்டதாரி<br>எதிர்பார்ப்பு:பொறியியலாளர்.கணக்காளர்<br>தொ.இ:G/11512 |
| பிறப்பு:1992இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா:செவ் 4 சூரி8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/ தொழில்: A/L,அம்புலன்ஸ் சாரதி. நிரந்தரம் எதிர்பார்ப்பு:சைவபோசனம் மணமகள். படித்தபெண்<br>தொ.இ: B/11486 | பிறப்பு:1992இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:24செவ்.சூரி9 இல்<br>உயரம்:5.4<br>தகைமை/தொழில்:Civil, நிரந்தர தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு (லண்டன்.கனடா)<br>தொ.இ:G/11516 |
| பிறப்பு:1995இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: - செவ் 11 சூரி 10இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் :B.Sc Engineering, Engineer தற்காலிகம்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்மணமகள்.படித்த பெண்<br>தொ.இ: B/11487 | பிறப்பு: 1994இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:செவ் 12.சூரி1 இல்<br>உயரம்:142cm<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:சாதாரணபடித்த மணமகன் அல்லது வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ:G/11517 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## 35 ஆவது பொதுப் பட்டமளிப்புவிழா
## 24, 25,மாசி, 2021

**பட்டம் பெறும் மாணவர்களுக்கான அறிவித்தல்**
**பட்டமளிப்பு வைபவத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார–பாதுகாப்பு நடைமுறைகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்புவிழா, மாசிமாதம், 24, 25 ஆம் திகதிகளில்,பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் ஆறு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.


பட்டமளிப்பு விழாவின் போது, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் முகமாகப் பின்வரும் நடைமுறைகள் மிகவும் இறுக்கமாகப் பின்பற்றப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

- ஒரேதடவையில் ஆகக் கூடியளவு 150 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும். அதற்கேற்றவகையில் 150 பேர் மாத்திரம் ஒரேதடவையில் அமர்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் எவரும் பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- முன்னைய அமர்வில் பங்குபற்றியவர்கள் வெளியேறிச் சென்றபின்னர் மட்டுமே அடுத்த அமர்வுக்குஉரியவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள்.
- மாணவர்கள் தங்களுடன் தனிப்பட்ட படப்பிடிப்பாளர்களை அழைத்து வருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- ஒவ்வொரு அமர்வின் போதும்,மண்டபத்தினுள் நுழையும் சகலரது பெயர், பாலினம், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம்,முகவரி,தொடர்பு (கைத்தொலைபேசி) இலக்கம் உட்பட்ட விபரங்கள் மண்டப நுழைவாயிலில் வைத்துப் பதிவு செய்யப்படும்.
- அத்துடன் மண்டபத்தினுள் நுழையும் சகலருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்படும்,காய்ச்சல் போன்றநோய் நிலை,அறிகுறிகள் காணப்படுபவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மண்டபத்தினுள் நுழையும் சகலரும் தமதுகைகளைக் கழுவுவதற்கானவசதிகள் மண்டப நுழைவாயிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் கைகளைக் கழுவிய பின்னர் உள் நுழைவது கட்டாயமானதாகும்.
- மண்டபத்தினுள் முகக்கவசம் அணிந்து உள் நுழைவதுகட்டாயமாகும் என்பதுடன், தொடர்ந்து முகக்கவசம் உரியமுறையில் அணிந்திருப்பது அவசியமாகும்.
- இரண்டுநபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியாக ஒருமீற்றர் தூரம் பேணப்படுதல் வேண்டும்.
- நிகழ்வு இடம்பெறும் சுற்றாடலில் உள்ளும்,வெளியும் உணவுப் பொருள்கள், நீராகாரங்கள் எந்தவொரு வடிவத்திலும் கையாளப்படுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

**பதிவாளர்**

(C-1488)

# நெல் உலரவிடும் தளம் இன்மையால் வீதிகளில் நெல்லினை உலரவிடும் விவசாயிகள்



(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நெல் உலர விடும் தளங்களின் பற்றாக்குறை காரணமாக வீதிகளில் நெல்லினை விவசாயிகள் உலரவிடுவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் ச.சத்தியசுதர்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முக்கிய குளங்களில் ஒன்றான முத்தையன் கட்டுக்குளம் உட்பட பல சிறிய குளங்களும் காணப்படுகின்றன.

இக்குளங்களின் கீழ் நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் நெல்லினை உலர வைப்பதற்கான தளங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக விவசாயிகள் நெல்லினை வீதியில் உலர வைக்கின்றனர்.

இதனால் விபத்துகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. வீதியில் பயணிப்பவர்கள் நெல் அறுவடைக் காலங்களில் விபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது. விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுகின்ற நிலப்பரப்பிற்கு ஏற்ப நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும். அரசாங்கம் உலர விடாத நெல்லினை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்தால் இவ்வாறான நிலைமைகளை குறைக்க முடியும். ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் நெற்பயிர்ச் செய்கைக் கேற்ப உலர விடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும்.

விவசாயிகளின் நலன் தொடர்பில் மாகாண விவசாயத் திணைக்களம், விவசாய அமைச்சும் அக்கறைகாட்ட வேண்டும். நெல் உலர விடும் தளங்கள் பற்றாக்குறையினை முல்லைத்தீவு மாவட்டமே கூடுதலாக எதிர்கொள்கிறது.

இதன் காரணமாகவே விவசாயிகள் நெல்லினை வீதியில் உலர வைக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

எனவே முல்லைத்தீவில் நெல் உலரவிடும் தளங்கள் அமைப்பதற்கு உரிய அதிகாரிகள் அக்கறை எடுத்து வீதியில்நெல்உலரவிடும்நிலையை மாற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# உரிய முறையில் புனரமைக்காத வீதியை மீண்டும் புனரமைக்க கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு யோகபுரம் கிழக்கு பகுதியில் நிறைவான ஒரு கிராமம் வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதி உரிய முறையில் புனரமைக்கப்படவில்லை என்றும் இதனை உரிய முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலிநகர் கிராமத்தினையும் துணுக்காய் யோகபுரம் கிழக்கு பகுதியினையும் இணைக்கும் மேற்படி வீதி கடந்த ஆண்டு நிறைவான தோர் கிராமம் எனும் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் இவ்வீதி புனரமைக்கப் பட்டது.

இதன் புனரமைப்பு பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதனை உரிய முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (5-4-315)

# 23 லீற்றர் கசிப்புடன் மூவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி மாயவனூர், சம்புக்குளம், உழவனூர், பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 3 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 23 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுர பொலிஸார் தெரிவித்தனர். (5-4-316)



# மண்ணுக்கு பரிசளிப்போம் மண்வளத்தை பாதுகாப்போம்



(நெளுக்குளம்)

“மண்ணுக்குப் பரிசளிப்போம் மண் நமக்கு மட்டுமல்ல நமது சந்ததிக்கும் பரிசளிக்கும். எமது காலத்தில் எமது மண்ணையும் வளத்தையும் பாதுகாப்போம்” எனும் தொனிப்பொருளில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கும் பசுமைப் புரட்சி செயற்றிட்டம் வன்னி தமிழ் மக்கள் ஒன்றியம் அமைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் பயன் தரும் மரங்களை இலக்கு வைத்து வாழ்வாதார பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் குறித்த செயற்றிட்டம், கிளிநொச்சி மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் நெடுங்கேணி கற்பகா அறநெறி பாடசாலையைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்களுக்கு பயன்தரும் பல்வேறு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (5-4-299)

# குழாய்நீர் விநியோகத்திற்காக வெட்டப்பட்ட வீதிகள் இதுவரை செப்பனிடப்படவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வற்றாப்பளை பெரும்பீலிப் பகுதியில் உள்ள முல்லைத்தீவு நகரத்திற்கான குடிநீர் வழங்கலுக்கென அமைக்கப்பட்டுள்ள நீர்விநியோகத்திற்கான கட்டுமானங்கள்நிறுத்தப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அமர்வில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினர் வீதிகளினை சேதப்படுத்தி இதுவரை புனரமைக்காமையினால் மக்கள் பல அசௌகரியங்களினை சந்திப்பதால் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினரிற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கையினை எடுக்கும்படி இச் சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் இதுவரை அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என வினவியதோடு வற்றாப்பளை வீதியிலே பெரும் பீலிக்கு அண்மையில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணற்றில் இருந்து நீரினை எடுப்பதனால் அயல்கிராமங்களான வற்றாப்பளை, ஊற்றங்கரை, நீராவிப்பிட்டி போன்ற கிராமங்களில் நிலத்தடி நீர் வற்றி விடும் என கிராம மக்களும் அமைப்பினரும் அரச அதிகாரிகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்தியிருந்தனர். பின்னர் கடந்த ஆண்டு நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் சுட்டிக்காட்டி அதிலிருந்து நீர் எடுப்பது நிறுத்தப்பட்டது.

இருப்பினும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினர் கட்டுமானத்திற்கான எந்தவித அனுமதியினையும் பிரதேச சபையிடம் பெறாமல் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தினை மதிக்காமல் தன்னிச்சையாக நீர்விநியோகத்திற்கான கட்டுமான பணிகளில் ஈடுபடுவதனை சுட்டிக்காட்டி அதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்ட கருத்தை ஏற்றுக் கொண்ட தவிசாளர் உடனடியாக அதனை நிறுத்துவதற்கு செயலாளரிடம் உத்தரவிட்டதாக எனத் தெரிவித்தார். (5-4-350)

# மதுபானசாலை அமைக்க அனுமதி வழங்கக்கூடாது

## ஒருங்கிணைப்புக் குழுவிடம் கோரிக்கை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு - மல்லாவி பிரதான வீதியின் அருகே மதுபான சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாதென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அக்கூட்டத்தில் தற்போது மல்லாவி நகரப்பகுதி அனிஞ்சியன் குளம் பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையினை, யோகபுரம் மத்திய பகுதியில் துணுக்காய் மாங்குளம் பிரதானவீதியில் இடமாற்றம் செய்வதற்கு அபிவிருத்திக்குழுவின் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இந் நிலையில் அப்பகுதியில் பாடசாலை, கோவில் என்பன காணப்படுவதால் அங்கு மதுபான சாலையினை அமைக்கமுடியாது என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

மேலும் ரவிகரனின் கருத்திற்கு கிராமமட்ட பொது அமைப்புக்களும் தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(5-4-6)

## இராசிபலன்

22.02.2021
மாசி 10, திங்கட்கிழமை
தசமி பிற்பகல் 3.26 மணிவரை
மிருகசீரிடம் முற்பகல் 9.24 மணிவரை
சுபநேரம் 12.31 - 2.01 மணிவரை
இராகுகாலம் 8.01 - 9.31 மணிவரை
சந்திராஷ்டமம்:- கேட்டை
அமிர்த சித்தம் வளவன்

**மேஷம்** — சகோதரர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பகையொன்று நட்பாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் முன்னேற்றம் தரும்.

**ரிஷபம்** — வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** — ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** — தொலைபேசி வழியில் மனநிறைவான செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**விருச்சிகம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்** — ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் பெறுவீர்கள்.

**கும்பம்** — பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மீனம்** — புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

குறைவானதற்குத் திருப்தியடைவதே நிறைவான செல்வம்.

# வேகமெடுக்கும் கொரோனா மரணங்கள்
# இறப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு) கொவிட் வைரஸ் தொற்றினால் ஏற்படும் இறப்புகளைக் கட்டுப்படுத்த முறையான திட்டம் தேவை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்தார் தெரிவித்தார்.**

ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது பெப்ரவரியில் இறப்பவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது.

எழுபது சதவீத இறப்பு 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகத் தடுப்பூசித் திட்டத்தில் இது தொடர்பில் கவனம் எடுக்கப்பட வேண்டும்.

ஜனவரி மாதம் முழுவதும் சுமார் 112 இறப்புகளைப் பதிவு செய்தோம்.



ஆனால் பெப்ரவரி மாதத்தில் இந்த 20 நாட்களில், ஜனவரி மாதத்தை விட அதிகமான இறப்புகள் பதிவாகியுள்ளன.

ஆகவே கொவிட் வைரஸ் தொற்றினால் ஏற்படும் இறப்புகளைக் கட்டுப்படுத்த முறையான திட்டம் தேவை என்று டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (நி-4)

# பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் சிக்கல் காணப்பட்டால்
# நிவர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை



(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின் www.doenets.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பூஜித குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர்களூடாகவும் தனியார் பரீட்சார்த்திகளாயின் அவர்களே குறித்த இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து ஒரு வாரத்திற்குள் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதும், அதன் பிரதியொன்றை பரீட்சை அனுமதிப்பத்திரத்துடன் இணைத்து பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் முதற்தடவையாக பரீட்சைகள் திணைக்களத்தினால் இவ்வாறான சலுகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அனைத்து அரச
## பாடசாலைகளுக்கும் விடுமுறை

**கல்வியமைச்சின் செயலர் அறிவிப்பு**

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து அரசாங்கப் பாடசாலைகளுக்கும் குறுகிய கால விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி இம்மாதம் 25ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையில் இந்த விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுற்று நிருபமூடாக மாகாணக் கல்வித் திணைக்கள செயலாளர்கள் தொடக்கம் அதிபர் வரையில் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (நி-4)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்., இராசேந்திரம் தேவகுமார்



எமது கல்லூரி ஆசிரியை **திருமதி.மினோஜா தொம்சன்** அவர்களின் அன்புத் தந்தை **இராசேந்திரம் தேவகுமார்** அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.




# சொர்க்கத்தில் தாடி, மீசை வளருமா?



ஒருமுறை, பீர்பாலின் செல்வாக்கு நாளுக்குநாள் மன்னரிடம் அதிகரிப்பது கண்டு, பீர்பாலை நிரந்தரமாக மன்னரிடம் இருந்து பிரிக்க எண்ணிய சில அமைச்சர்கள் ஒருதிட்டம்போட்டு அதன்படி, மன்னரின் முடி திருத்துபவனை அழைத்து, பொன்னையும் பொருளையும் அளித்து ஆசை வார்த்தை கூறி, தங்கள் இரகசிய திட்டத்திற்கு அவனைச் சம்மதிக்க வைத்து, திட்டம்நிறைவேறிய பின், மேலும்பொன்னை அளிப்பதாகக் கூறி தங்கள் சதித் திட்டத்தை தயார் செய்தனர்.

எதிர்பார்த்ததுபோல, ஒரு நாள் மன்னரிடமிருந்து முடித்திருத்துபவனுக்கு அழைப்புவர, மன்னரின் முடியை வெட்டிக்கொண்டே அவன் "மன்னா, தங்கள் தந்தை முடிபோல தங்களுக்கும் முடி அழகாக இருக்கிறது, இருந்தாலும் நீங்கள் உங்கள் தந்தையாரின் நலன் மீது அக்கறை செலுத்துவதில்லை, இப்போது தந்தையாரின் தலைமுடி நீண்டு வளர்ந்து, அவருடைய முக அழகை கெடுத்துவிட்டது. அவர்நலனை விசாரியுங்கள் என்றான்.

என்ன உளறுகிறாய்? என்தந்தை காலமாகி நெடு நாட்களாகிவிட்டன. இப்போது எப்படி அவருக்கு முடி வளர்ந்திருக்கும்? இறந்து போனவரிடம் எப்படி நலம் விசாரிக்கமுடியும்? புத்தி பேதலித்து விட்டதா உனக்கு? மன்னர் கடிந்து கொண்டார்.

அவன் பவ்யமாக "முடியும் மன்னா! ஒரு மந்திரவாதி இருக்கிறான், அவன் உயிருடன் ஒருவரை சுடுகாட்டுக்கு கொண்டுசென்று விஷேசமந்திரங்களை சொல்லி, அவன் உடலை எரிப்பார். நம் கண்களுக்குத் தான் உடலை நெருப்பு எரிப்பதாகத் தெரியும், மந்திரவாதியின் சக்தியால், அந்த நபரின் உடல் தீயில் வேகாமல் மேலோகம் சென்று நம் முன்னோரை கண்டு வரும். என்ன, ஒரு நம்பிக்கையான ஆள் மட்டும் வேண்டும்." என்று மன்னரிடம் கூறினார்.

மன்னர் இறந்த தந்தையின் நலம் விசாரிக்க இப்படி ஒருவழி இருப்பது தெரியாமல் போய்விட்டதே எனவருந்தி, யாரை அனுப்பலாம் என யோசித்தார். "யோசனை ஏன் அரசே? தங்கள் அவையில் புத்திசாலியும் தங்களின் நன்மதிப்பையும் கொண்ட ஒரே அமைச்சர் பீர்பால் தான். நீங்கள் சொன்னால் தட்டாமல் அவரே ஒப்புக் கொண்டு தங்கள் தந்தையின் நலம் விசாரித்து வருவார்" என்று சொல்ல, மன்னர் பீர்பாலை அவைக்கு அழைத்தார்.

(தொடரும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்




பாபிலோனை நோக்கி அலெக்சாண்டரின் படைகள் செல்லத் தொடங்கின. அங்கு இதுவரை சந்தித்திராத புதிய எதிரியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரித்தனர் அரசியல் வல்லுநர்கள்.

பாபிலோன் நகருக்கு வெளியே தங்குவதற்காக பிரமாண்டமான முகாம்களை அமைத்தனர். ஆனால் அங்கு வந்த நொடியிலிருந்து அலெக்சாண்டரின் முகத்தில் பிரகாசம் இல்லை.

உடலில் சோர்வு அப்பியிருந்தது. தீய சகுனங்கள் நடப்பதாக நினைத்தார். அவற்றை மறப்பதற்காக கொண்டாட்டங்களுக்கு உத்தரவிட்டார்.

அந்தக் கொண்டாட்டங்களின் வழியாக உற்சாகத்தை வலுக் கட்டாயமாக வரவழைத்துக் கொண்டார்.

மன்னரின் சந்தோஷம் வீரர்களையும் உற்சாகம் கொள்ளச் செய்தது. ஒவ்வொரு நாளும் சந்தோஷமாகக் கழிந்தது. கிமு. 323 ஜூன் 13. காலைநேரம். அலெக்சாண்டரின் உடலெங்கும் சூடுபரவியது. அனலாகக் கொதித்தது. நீராடினால் சரியாகிவிடுமோ என்று நினைத்து நீராடினார் அவர்.

ஆனால் குளியல் அறையிலேயே சட்டென்று தடுமாறி விழுந்தார். சமாளித்து எழுந்து கொண்டார். காய்ச்சல் குறைந்தது போல இருந்தாலும் இருட்டியதும் மீண்டும் உடல் கொதிக்கத் தொடங்கியது.

காலை எழுந்ததும் காய்ச்சல் போவதும் இருட்டியதும் வந்து பாடாய்படுத்துவதும் அலெக்சாண்டரின் உடலை கடுமையாக பாதித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் படுக்கையிலேயே மயக்கமடைந்து விட்டார். விடயம் மாசிடோனிய வீரர்களுக்குக் கசிந்து விட்டது.

எல்லோரும் கும்பலாக வந்து மன்னரை ஒருமுறை சந்திக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். ஆனால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஆத்திரமடைந்த வீரர்கள், அந்த நகரமே பெரும் கூச்சல் போட ஆரம்பித்தன. எனவே அனுமதி கிடைத்தது. அமைதியாகப் பார்த்து விட்டு சலசலப்புடன் திரும்பினார்கள்.

(தொடரும்)

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு 60 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள பனிப்பொழிவு காரணமாக சுமார் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் சுமார் 13 மில்லியன் மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகள், கார்கள், வீதிகள், மரங்கள் என அனைத்தும் உறை பனிக்குள் மூழ்கிக்கிடக்கின்றன.

நீர்வீழ்ச்சிகளும் பனி சிற்பங்களாக உறைந்து காணப்படுகின்றன. குளிர் அதிகரிப்பதால் மின்சார தேவை அதிகரித்துள்ளது.

ஆனால், பனிப்பொழிவால் மின் கட்டமைப்பு முடங்கி உள்ளதால், கடந்த நான்கு நாட்களாக சுமார் 34 இலட்சம் மக்கள் மின்சாரமின்றி பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மின்தடை காரணமாக பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

இதேவேளை, டெக்சாஸ் மாநிலத்திற்கு அவசர உதவிகளை உடனடியாக வழங்க தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உறுதியளித்துள்ளார். (நி-4)

# பறவைக் காய்ச்சல் வைரஸ் முதன்முறையாக மனிதனுக்கு பரவியது

(கொழும்பு)

**உலகில் முதன்முறையாக பறவைக் காய்ச்சல் வைரஸ் மனிதனுக்குப் பரவிய வழக்கு தெற்கு ரஷ்யாவில் பதிவாகியுள்ளது.**

இந்நிலையில், இந்த வைரஸ் பரவல் குறித்து உலக சுகாதார அமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் சுகாதார நுகர்வோர் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

H5N8 ஏவியன் இன்புளுவன்ஸா என்ற வைரஸே மனிதர்களிடத்தில் கண்டறியப்பட்டுள்ள நிலையில் இது, இன்னும் மக்களிடையே பரவவில்லை என ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், தெற்கு ரஷ்யாவில் உள்ள கோழி பண்ணையொன்றில் ஏழு பண்ணைத் தொழிலாளர்களுக்கு இந்த வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டதாகவும், இதுகுறித்த தகவல்களை உலக சுகாதார அமைப்புக்கு அதிகாரிகள் அனுப்பியுள்ளதாகவும் ரஷ்யாவின் பொதுச்சுகாதாரத் தலைவர் அன்னா பொபோவா நேற்று முன்தினம் சனிக்கிழமை தொலைக்காட்சி ஊடகமொன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த வைரஸ் மனிதர்களுக்கு இடையே பரவுவதில்லை எனவும் ஆனால், எதிர்காலப் பிறழ்வுகள் எவ்வாறான பரவல் நிலையைக் கொண்டிருக்கும் என்று கூறமுடியாது எனவும் அன்னா பொபோவா தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த முன்னறிவிப்பானது முழு உலகிற்கும் எச்சரிக்கையையும் அதனை எதிர்கொள்வதற்கான திட்டமிடல் மற்றும் சரியான நேரத்தில் தடுப்பூசிகளைத் தயாரிப்பதற்கான காலத்தையும் தந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பரில் குறித்த கோழிப் பண்ணையில் பறவைகள் மத்தியில் இந்த வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதாக கோழிப்பண்ணை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உலக சுகாதார அமைப்பின் அறிவிப்புப்படி, "A (H5) வைரஸ்கள் கொண்ட மனித நோய்த் தொற்றுகள் அரிதானவை மற்றும் பொதுவாக நோய் வாய்ப்பட்ட மனிதர்களுக்கு இது ஏற்படுகின்றன என்றாலும், அவை மனிதர்களில் கடுமையான நோய் அல்லது மரணத்திற்கு வழிவகுக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# காற்று மாசுபாட்டை குறைக்கும் முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து



(வோஷிங்டன்)

காற்று மாசுபாட்டை குறைக்கும் முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச அளவில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்த உலக நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன.

புவி வெப்ப மயமாதலை $2^{o}C$ க்கு மிகாமல் கட்டுப்படுத்துவதற்கான பருவநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தம் கடந்த 2015ஆம் ஆண்டு பரிசில் நடந்த கூட்டத்தின்போது எட்டப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் முதலில் இணைந்த அமெரிக்கா, ட்ரம்ப் ஆட்சிக்காலத்தின் போது விலகுவதாக அறிவித்தது.

வளரும் நாடுகளுக்கு ஆதரவாக இந்த ஒப்பந்தம் இருப்பதாக விமர்சித்து வந்த ட்ரம்ப், பருவ நிலை ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதற்கிடையே, அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜோ பிடன் வெற்றிபெற்று அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். தனது தேர்தல் பிரசாரத்தின் போதே, தான் ஜனாதிபதியானால் பரிஸ் பருவ நிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என் கூறியிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்கா மீண்டும் அதிகாரப்பூர்வமாக பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது. இதையடுத்து, காற்றின் மாசுபாட்டை குறைக்கும் முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. (நி-4)

# உத்தரகாண்ட வெள்ளப்பெருக்கு

## 15 ஆவது நாளாக தொடரும் மீட்பு பணிகள்

(டில்லி)

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் 15ஆவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

உத்தரகாண்ட் மாநிலம், சமோலி மாவட்டத்தில் கடந்த 7ஆம் திகதி, நந்தாதேவி பனிப்பாறையின் ஒரு பகுதி உடைந்து விழுந்ததால், அலக்நந்தா, தாலிகங்கா ஆறுகளில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கரையோர வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. அங்கிருந்த நீர் மின்நிலையம் முற்றிலும் சேதமடைந்தது.

தேசிய அனல்மின் கழகத்துக்கு சொந்தமான தபோவன்-விஷ்ணுகாட் சுரங்கத்தில் சேறும், இடிபாடுகளும் குவிந்ததால், உள்ளே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

அவர்களை மீட்க 15 இந்தோ-திபெத் எல்லை படை, தேசிய பேரிடர் மீட்புப்படை, மாநில பேரிடர் மீட்புப்படை ஆகிய வற்றை சேர்ந்த வீரர்கள் போராடி வருகிறார்கள்.

சுரங்கத்திலும் மீட்புப்பணிகள் தொடர்ந்து 15ஆவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தபோவன்-விஷ்ணுகாட் இடத்திலிருந்து மேலும் இரண்டு உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் இதுவரை 67 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமை அதிகாரி அசோக் குமார் தெரிவித்துள்ளார்.

மேலும் 137 பேர் இன்னும் காணவில்லை என்றும் அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# 100 வயதுடைய மூதாட்டிக்கு வெற்றிகரமாக சிகிச்சையளித்த ரஷ்ய மருத்துவர்கள்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் சமராவில் உள்ள நகர மருத்துவமனையின் மருத்துவர்கள் பல வாரங்களுக்கு முன்னர் கோவிட்-19 உடன் அனுமதிக்கப்பட்ட 100 வயதுடைய நோயாளிக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்ததாக அந்நாட்டு சுகாதார ஆணையம் சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

அதன்படி கொரோனா தொற்றிலிருந்து மீண்ட 100 வயதான மூதாட்டி, சமாராவின் நகர மருத்துவமனையில் உள்ள தொற்று விடுதியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

அவர் பல வாரங்களாக தேவையான மருத்துவ சிகிச்சையைப் பெற்று வந்தார் மற்றும் முழு குணமடைந்த பின்னர் இவ்வாறு வைத்திய சாலையை விட்டு வெளியே ற்றப்பட்டார். (நி-4)

# கொரோனா தடுப்பூசியை பகிர்ந்தளிக்க ஜி-7 நாடுகள் ஒன்றிணைவு

(ஜெனிவா)

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தடுப்பூசியை பகிர்ந்தளிக்க ஒன்றிணைவதாக G7 நாடுகளின் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர். G7 மாநாட்டின் பிரதான அமர்வின் நிறைவில் கூட்டாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்காக 7.5 பில்லியன் டொலர் நிதியை ஒதுக்க இணங்கியுள்ளதாகவும் G7 நாடுகளின் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்காக நீதியான முறையில் தடுப்பூசிகளை விநியோகித்தல், வல்லரசு நாடுகளின் தலையாய கடமையென இதன் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட 7.5 பில்லியன் டொலரில் 4 பில்லியன் டொலரை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உறுதியளித்துள்ளார். (நி-4)

## தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்த
# 14 பேர் தயாராக இருந்தனர்
## சஹ்ரானிடம் பயிற்சி பெற்ற பெண் வாக்குமூலம்

(கொழும்பு)

தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்த 14 பேர் உறுதி பூண்டிருந்ததாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் சஹ்ரான் ஹாசிமிடம் பயிற்சி பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யுவதி தகவல் வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் வழங்கிய வாக்கு மூலத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த 14 பேரில் ஐவர் சாய்ந்தமருது தாக்குதலில் மரணித்தனர் என்றும் 3 பேர் விளக்கமறியலில் உள்ளதுடன், தாம் உள்ளிட்ட 7 பேர் பயங்கரவாத தடுப்பு பிரிவின் தடுப்பில் உள்ளதாக குறித்த யுவதி வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சஹ்ரான் ஹாசிமிடம் பயிற்சி பெற்றார் என்ற குற்றச் சாட்டில் மாவனெல்லையை சேர்ந்த 24 வயதுடைய குறித்த யுவதி கடந்த வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

குற்றப் புலனாய் வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவின் ஊடாக மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய குறித்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மொஹமட் இப்ராஹிம் சஹிதா என்ற 24 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாவனெல்லை புத்தர் சிலை உடைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களின் சகோதரி என்பதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் 1500 பேருக்கு தடுப்பூசி

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உட்பட சுமார் 1,500 பேருக்கு இதுவரை கொவிட் -19 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதன்படி விமான நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவத்தினர், விமானப்படை, பொலிஸ்துறை, குற்றப் புலனாய்வுத்துறை, குடிவரவு மற்றும் குடியகல்வு துறையினர், சுங்கப் பிரிவினர், துப்பரவாளர்கள், ஊழியர்கள் மற்றும் வர்த்தக மாலில் உள்ளவர்களுக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசி செயல்முறை பெப்ரவரி 17 அன்று கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் தொடங்கப்பட்டது. மீதமுள்ள ஊழியர்கள் மற்றும் தடுப்பூசி செலுத்தப்படாத அதிகாரிகளுக்கு எதிர்வரும் நாட்களில் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். (நி-4)

## ஒரு கோடி கொரோனா தடுப்பூசி
### இந்தியாவிடம் இருந்து வாங்கும் இலங்கை

(கொழும்பு)

இந்தியாவிடமிருந்து ஒரு கோடி அளவிலான கோவிஷீல்டு கொரோனாத் தடுப்பூசி மருந்துகளைப் பெற புனே சீரம் நிறுவனத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது.

இலங்கையில் 79 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 400 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

முன்னதாக இந்தியா வழங்கிய 5 இலட்சம் டோஸ் கொரோனாத் தடுப்பூசிகளைக் கொண்டு இலங்கையில் தடுப்பூசி திட்டம் தொடங்கப்பட்டு இருக்கின்றது.

இந்தத் தடுப்பூசித் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள ஒரு கோடி கோவிஷீல்டு தடுப்பூசி மருந்துகளை இந்தியாவிடம் இருந்து இலங்கை வாங்கத் திட்டமிட்டுள்ளது. (நி-4)

## துப்பாக்கி, கூரிய ஆயுதங்களுடன் ஒருவர் கைது



மினுவாங்கொட பகுதியில் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

மினுவாங்கொட பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் மாலை கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மினுவாங்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில், பொலிஸ் குழுவொன்று விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டுள்ளது.

மினுவாங்கொட - பத்தட்டுவன பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து குழல் 12 ரக துப்பாக்கி ஒன்றும் அதன் தோட்டாக்கள் 16 மற்றும் 9 மில்லிமீட்டர் ரக துப்பாக்கி தோட்டாக்கள் 12 கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 3 வாள்கள், 4 கத்திகள் என சில ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2235

கேனிகா




நிதர்சன்




நதீஷா




வைதேகி




காயேஷ்




வக்ஷலன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரசியலமைப்பு தொடர்பான யோசனை அடுத்த வாரம் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சியினர் தங்களின் கட்சி மட்டத்திலான யோசனைகளை தனித்து முன்வைத்துள்ளார்கள். அரசியலமைப்பு தொடர்பிலான அனைத்து யோசனைகளும் பரிசீலனை செய்யப்பட்டு பொதுஜன பெரமுனவின் யோசனை அடுத்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நாட்டுக்கு பொருந்தும் வகையிலான அரசியலமைப்பு உருவாக்கம் ஆகியவை பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் பிரதான தேர்தல் கால வாக்குறுதிகளாக காணப்பட்டன.

இதற்கமைய பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அரசாங்கத்தை ஸ்தாபித்ததுடன் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்து செய்யப்பட்டு அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவது பொதுஜன பெரமுனவின் பிரதான யோசனையாகும் என அக் கட்சியின் தவிசாளர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பின் யோசனைகள் கட்சியின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷவினால் நிபுணர் குழுவினரிடம் முன்வைக்கப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் யோசனைகளில் தேசியக் கொடியில் மாற்றம், ஒற்றையாட்சி ஆட்சிமுறைமை, பௌத்த மதம் அரச மதம் உள்ளிட்ட விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. பொதுஜன பெரமுனவின் கூட்டணியமைத்துள்ள கட்சியினர் தமது கட்சியின் தனிப்பட்ட நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார்கள்.

அனைத்து தரப்பினரது யோசனைகளும் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான யோசனை எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக குழுவினரிடம் முன்வைக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டது. (நி-4)

# 11ம் வகுப்பு தேர்வில் சித்தியடையாத குழுவின் தீர்மானங்களை ஒருபோதும் ஏற்க மாட்டோம்



(கொழும்பு)

சாதாரணதர பரீட்சையில் சித்தியடையாத குழுவொன்றின் தீர்மானத்தை ஏற்க முடியாது என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவையும் அவர் நிராகரித்தார்.

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்திற்கு முன்னாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கு உரையாற்றும் போதே அவுர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறு ஆய்வு செய்ய அமைச்சர் குழுவை நியமித்திருப்பது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில பாதகமான பரிந்துரைகளை மறைப்பதற்கான முயற்சி எனவும் அவர் தனது சந்தேகத்தை வெளியிட்டார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் நியமித்தார். மற்றைய உறுப்பினர்களாக அமைச்சர்கள் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித அபே குணவர்த்தன ஆகியோர் அடங்குவர்.

எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்குள் தொடர்புடைய அறிக்கைகளைப் படித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

"இந்த ஆணைக்குழுவின் அறிக்கை ஐந்து உயர்ந்த அறிவார்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டது. எனினும் சாதாரணதர பரீட்சையில் சித்தியடையாத குழுவைப் பற்றி முடிவு செய்ய நாங்கள் எவ்வாறு அனுமதிக்க முடியும்" என்று கர்தினால் கேள்வி எழுப்பினார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உச்சக் கட்டம்

ஒரு ஊரிலே ஒரு இளைஞன் இருந்தான். அவனுக்கு வில்வித்தை கற்றுக்கொள்ள வேணும் என்று ஆசை. கற்றுக்கொள்கிறது மட்டும் இல்லை. "இந்த உலகத்திலேயே வில் வித்தையிலே நம்மை மிஞ்சின ஆள் வேறு யாரும் இருக்கக்கூடாது.இதுதான் அவன் ஆசை.பக்கத்தில் உள்ள காட்டில் ஒரு குரு இருந்தார். வில்வித்தையில் மிகக் கெட்டிக்காரர்.நூறு அடி தூரத்திலே ஒரு சின்ன இலையைக் குறி வைத்து அம்பை விடுவார். அம்பு அந்த இலையை சரியாக துளைத்துக் கொண்டு போய்விடும். அவ்வளவு கெட்டிக்காரர்.அவரிடம் இவன் போனான். ''என்னை• உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள். வில்வித்தை கற்றுக்கொடுங்கள் '' என்றான்.

அவர் சொன்னார்..." முதலிலே கண்களை மூடாமல் உன்னிப்பாய் பார்க்கிறதுக்குக் கற்றுக் கொள். அதன் பின்பு இங்கே வா '' என்றார். இவன் திரும்பி வீட்டுக்குப் போனான். வீட்டிலே இருந்த தறியிலே ஊடும்பாவும் நகர்வதைக் கண்சிமிட்டாமல் பார்த்துப் பழகிக்கொண்டான். இந்தப் பயிற்சி முடிவதற்குள் இரண்டு வருடம் ஆகிவிட்டது.அதன் பின்பு அந்தக் குருவைத் தேடிப் போனான். கண்சிமிட்டாமல் பார்த்துப் பழகி விட்டேன் என்றான். ''சரி...இப்ப தான் நீ முதல் படியிலே இருக்கிறாய். இனிமேல் பார்வையைக் கூர்மைப்படுத்திக்கொள். கண்ணுக்குத் தெரியாத பொருள் தெரிய வேண்டும். சின்னப் பொருள் கூட உன் கண்ணுக்குப் பெரிதாகத் தெரிய வேணும். இதையும் பழக்கப்படுத்திக் கொள். அதற்கு பின்பு என்னை வந்து பார்'' என்றார். சரி என்று சொல்லி இவன் வீட்டுக்குப் போனான். தோட்டத்திலே உள்ள ஒரு கண்ணுக்குத் தெரியாத சின்ன பூச்சியை எடுத்து ஒரு புல் இதழிலே வைத்தான்.

அதை வீட்டுக்குக் கொண்டு வந்து ஜன்னலில் தொங்க விட்டான். தினமும் பூச்சியை உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்.முதலிலே பூச்சி சரியாகத் தெரியவில்லை. நாள் ஆக ஆக அது பெரிதாக ஆகிவிட்டது. நல்லா பார்க்க முடிந்தது. அதன் பின்பு குருவிடம் வந்தான். கொஞ்ச நாளிலே எல்லா நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டான். வில்வித்தையிலே நிபுணன் ஆகி விட்டான்.முந்நூறு அடி தூரத்திலே உள்ள சிறிய இலையைக்கூட சரியாக குறி வைத்து அடித்து அம்பாலே துளை போட்டான். ஒரு கோப்பையிலே தண்ணீரை நிரப்புவது, அதை வலதுகை முழங்கையிலே வைக்கிறது. அப்படியே வைத்துக்கொண்டு அம்பை விடுகிறது. குறியும் தவறாது. மரப்பையிலே உள்ள தண்ணீரும் சிந்தாது. இனிமேல் அவன் சாதிக்க வேண்டியது எதுவும் கிடையாது. இருந்தாலும் அவனை மிஞ்ச ஆள் இருக்கக் கூடாது என்பதே அவன் குறிக்கோள்.அதற்கு தடையாக ஒருத்தர் இருக்கிறாரே அவர்தான் கற்றுக் கொடுத்த குரு. அவர் இருக்கக்கூடாது என்று நினைத்தான்.அவருக்குத் தெரியாமல் ஒரு அம்பை எடுத்து விட்டான். ஆனால் அந்தக் குரு கண்ணிமைக்கிற நேரத்திலே பக்கத்திலே இருந்த குச்சியை எடுத்து அந்த அம்பைத் தட்டி விட்டார்.அதுக்காக சீடன் மீது கோப்படவில்லை. அவனைக் கூப்பிட்டுச் சொன்னார்.இதோ பாரப்பா எனக்குத் தெரிந்ததெல்லாம் உனக்குக் கற்றுக் கொடுத்து விட்டேன். என்னைவிடப் பெரிய குரு ஒருத்தர் இருக்கிறார்.அதோ அந்த மலை உச்சியிலே இருக்கிறார். அவரிடம் நீ கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கு என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டார்.உடனே சீடன் அந்தப் பெரிய குருவிடம் போனான். ''நான் வில்வித்தையிலே கெட்டிக்காரன் தானாவென்று எனக்குத் தெரிய வேணும் '' என்றான். அதற்கு குரு கேட்டார்."சரி அதைத் தெரிந்து கொள்ளலாம். அப்படியென்றால் உன்னாலே வில் அம்பு இவை இரண்டும் இல்லாமல் குறி வைக்க முடியுமா? ''என்று கேட்டார். இப்படிக் கேட்டுவிட்டு அவனை ஒரு மலை உச்சி விளிம்புக்கு கொண்டு போய் நிறுத்தினார்.

எட்டிப் பார்த்தால் கீழே பயங்கரமான பாதாளம். அவனுக்கு தலை சுற்ற ஆரம்பித்து விட்டது. அப்படியே தலையைப் பிடித்துக்கொண்டு கீழே உட்கார்ந்தான். இப்ப அந்த குரு சிரித்துக்கொண்டே " வில்வித்தை என்றால் என்ன என்று பார் ''என்றார்."உங்கள் வில் எங்கே என்றான். "வில்லா அது எதற்கு? வில்லும் அம்பும் தேவைப்பட்டால் நீ இன்னும் ஆரம்ப நிலையிலே இருக்கிறாய் என்று அர்த்தம். உண்மையான வில்வித்தைக்கு அவை இரண்டும் தேவையில்லை என்றான்.9 ஆண்டுகள் அவரிடம் இருந்தான். அதன் பின்பு ஆணவம் அவனிடம் இல்லை. பக்குவம் அடைந்து விட்டான். பழைய குரு மறுபடியும் இவனை வந்து பார்த்தான்." நீ இப்போ நிபுணன் ஆகிவிட்டாய். உன் கால்களை தொடுவதற்குக் நான் அருகதை இல்லாதவன்! '' என்றான். யாராவது வில்வித்தையைப் பற்றி கேட்டால் அவன் சொல்லுவான்...

பேச்சின் உச்சக்கட்டம் மௌனம். செயலின் உச்சகட்டம் செயலின்மை. வில்வித்தையின் உச்சகட்டம் வில்லை எய்யாமல் இருப்பதுதான்! என்றான். அதன் பின்புதான் அவன் புகழ் எங்கும் பரவியது.

ஒருநாள் ஒரு நண்பன் வீட்டுக்குப் போயிருந்தான். அங்கே இவனுக்குப் பழக்கப்பட்ட பொருள் ஒன்று இருந்தது. அதைப் பார்த்தான். அது என்ன என்பது இவனுக்குச் சரியாக நினைவு வரவில்லை. யோசித்துப் பார்த்து அந்த நண்பனையே கேட்டானாம்...''அது என்ன? அதையேன் இங்கே வைத்திருக்கின்றாய் என்று கேட்டான். இப்ப அந்த நண்பன் சிரித்துக் கொண்டே சொன்னான் "நீ வில்வித்தையிலே சிறந்த நிபுணன் ஆகிவிட்டாய். அதனாலே தான் அது என்ன என்பதை மறந்துவிட்டாய். அதுதான் வில்லும் அம்பும் '' என்றான். இதுதான் நிபுணத்துவத்தின் உச்ச நிலை.

நாமெல்லாம் அன்றாட வாழ்க்கையிலே பல விடயங்களை மறந்து விடுகிறோம். அதனாலே அதிலெல்லாம் நிபுணத்துவம் அடைந்து விட்டோம் என்று அர்த்தம் இல்லை.நம்ம ஆள் ஒருத்தன் வீட்டிலே அவனுடைய அம்மாவைப் பார்த்துக் கேட்டானாம். " அது என்னம்மா என்னமோ குச்சி மாதிரி இருக்கு. நம்ம வீட்டிலே என்னைத் தவிர எல்லோருமே அதைத் தினமும் உபயோகப்படுத்துறிங்கள்?'' என்று கேட்டிருக்கிறான்.''அதுதான் பேஸ்ட்-பிரஷ் பல்லு விளக்கிறது என்று ஒரு காரியம் உண்டு. அதைச் செய்யிறதுக்காக உபயோகப்படுத்திற பொருள் அது!'' என்றாராம் அந்த அம்மா.(ஜென்னுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் தரவோ தத்துவத்தை விளக்கும் நஹாசிமாடோன் எழுதிய கதை அது).சீடனின் பெயர்: சீசியாங், முதல்குரு :வேய்ஃபைய், இரண்டாவது குரு: கான்யிங்,மலையின் பெயர்: ஹோ

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

11

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதில் 28 மாநிலங்களின் தபால் வாக்குகள் தேர்தல் தினத்திற்கு (நவம்பர் 3 ஆம் திகதிக்கு) முன் தேர்தல்கள் அலுவலகத்திற்கு கிடைக்க வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டுள்ளன. எனவே அவ்வாக்குகள் எண்ணுவதில் தாமதங்கள் ஏற்படாது.

ஆனால் வோஷிங்டன், டி.சி. மற்றும் 22 மாநிலங்களின் தபால் வாக்குகள் தேர்தல் தினத்திற்கு (நவம்பர் 3 ஆம் திகதிக்கு) முன் தபாலில் சேர்க்கப்பட வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டுள்ளன. இம்மாநிலங்களின் தபால் வாக்குகள் தபாலில் கிடைக்கவேண்டிய திகதிகள் பின்வருமாறு. நவம்பர் 4 ஆம் திகதி-1, 6 ஆம் திகதி-5, 9 ஆம் திகதி-3, 10 ஆம் திகதி-5, 12 ஆம் திகதி-1, 13 ஆம் திகதி-3, 17 ஆம் திகதி-1, 20 ஆம் திகதி-1 (கலிபோர்னியா மாநிலம்), 23 ஆம் திகதி-1 (வோஷிங்டன் மாநிலம்). உட்டா மாநிலம் தபாலில் கிடைக்கவேண்டிய திகதியை வரையறுத்தில்லை.

எனவே இவற்றை எண்ணுவதில் காலதாமதம் ஏற்படும். தேர்தல் நாளுக்குக் கிட்டத்தட்ட மூன்று வாரங்களுக்குப்பிறகு, நவம்பர் 23 இற்குள் வரும் எந்தத் தபால் வாக்குகளும் நவம்பர் 3 இற்குள் தபாலில் இடப்பட்டிருந்தால் அவை வோஷிங்டன் மாநிலத்தில் கணக்கிடப்படும். இவ்வாறு காலதாமதம் ஏற்படும் என்பதனாலேயே தபால் வாக்களிப்புத் தேர்தல்களில் மோசடிக்கு வழிவகுக்கும் என்று ட்ரம்ப் தேர்தலுக்கு முன் கூறியிருந்தார். இதுபற்றி பின்னர் பார்ப்போம்.

**தபால் வாக்களிப்புத் தொடர்பாக அமெரிக்காவின் வெவ்வேறு மாநிலங்கள் வெவ்வேறு விதிகளைக் கொண்டிருப்பதால் இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உண்டு. அம் மாநிலங்களில் அளிக்கப்படும் தபால் வாக்குகள், தபாலில் கிடைக்க வேண்டிய திகதி அல்லது தபாலில் சேர்க்கப்படவேண்டிய திகதி வித்தியாசமாக உள்ளன. தேர்தல் நவம்பர் 3 ஆம் திகதி நடந்தாலும் கலிபோர்னியா மாநிலத்தில் நவம்பர் 20 ஆம் திகதி வரை கிடைக்கும் தபால் வாக்குகளும் வோஷிங்டன் மாநிலத்தில் நவம்பர் 23 ஆம் திகதி வரை கிடைக்கும் தபால் வாக்குகளும் எண்ணப்படுகின்றன.**

தேர்தல் நாளுக்குப் பிறகு வாக்குகளை ஏற்றுக்கொள்ளும் வோஷிங்டன், டி.சி.மற்றும் 22 மாநிலங்கள் நாட்டின் 538 தேர்தல் கல்லூரி வாக்குகளில் 317 **(59%)** ஐக்கொண்டுள்ளன. இம்மாநிலங்களின் வாக்குகள் தேர்தல் நாளுக்குப் பிறகும் எண்ணவேண்டியிருக்கும். தேர்தல் நாள் இரவில் ஒரு வெற்றியாளர் அறிவிக்கப்படாமல் இருப்பதற்கு இது ஒரு காரணம் ஆகும்.

## தேர்தல் நாளன்று வாக்களிப்பு முடிவுறல்

அமெரிக்காவின் பெரும்பாலான மாநிலங்களில் 2020 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி காலை 6 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள வெர்மாண்ட் மாகாணத்தில் முதலில் வாக்குப்பதிவு தொடங்கியது. மாநிலங்களில் வாக்குப் பதிவுகள் இரவு 9 மணி வரை நடைபெற்றது. (சில மாநிலங்களில் இது மாறுபடும்) ஒவ்வொரு மாநிலத்திலும் வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கி அறிவிக்கப்படும்.

மாநிலங்களுக்கிடையே உள்ள நேர வேறுபாட்டின் காரணமாக அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையில் உள்ள பெரும்பாலான வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு முடிந்து வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும் நிலையில், மேற்கில் வாக்களிப்பு நடந்துகொண்டிருக்கும்.

நவம்பர் 3 ஆம் திகதி இரவு 7 மணி ஜோர்ஜியா, இந்தியானா, கென்டக்கி, தென்கரோலினா, வெர்ஜீனியா மற்றும் வெர்மான்ட் ஆகிய 6 மாநிலங்களில் வாக்களிப்பு முடிவடைந்தது. இரவு 7.30 மணி வடகரோலினா, ஓஹியோ மற்றும் மேற்கு வெர்ஜீனியா ஆகிய 3 மாநிலங்களில் வாக்களிப்பு முடிவடைந்தது. இரவு 8 மணி அலபாமா, கனெக்டிகட், டெலா வேர், புளோரிடா, இல்லினாய்ஸ், மைனே, மேரிலாந்து, மசாசூசெட்ஸ், மிசிசிப்பி, மிசூரி, நியூஹாம்ப்ஷயர், நியூஜெர்சி, ஓக்லஹோமா, பென்சில் வேனியா, ரோட்தீவு, டென்னசி ஆகிய 16 மாநிலங்களில் மற்றும் வோஷிங்டன் டி.சி. வாக்களிப்பு முடிவடைந்தது. இரவு 8.30 மணி ஆர்கன்சாஸ் மாநிலத்தில் வாக்களிப்பு முடிவடைந்தது.

இரவு 9 மணி அரிசோனா, கொலராடோ, கன்சாஸ், லூசியானா, மிச்சிகன், மினசோட்டா, நெப்ராஸ்கா, நியூமெக்ஸிகோ, நியூயோர்க், வடக்குடகோட்டா, தெற்குடகோட்டா, டெக்சாஸ், விஸ்கான்சின் மற்றும் வயோமிங் ஆகிய 14 மாநிலங்களில் வாக்களிப்பு முடிவடைந்தது. இரவு 10 மணி அயோவா, மொன்டானா, நெவாடா மற்றும் உட்டா ஆகிய 4 மாநிலங்களில் வாக்களிப்பு முடிவடைந்தது. இரவு 11 மணி கலிபோர்னியா, இடாஹோ, ஒரிகான் மற்றும் வோஷிங்டன் ஆகிய 4 மாநிலங்களில் வாக்களிப்பு முடிவடைந்தது. இரவு 12 மணி ஹவாய் மாநிலத்தில் வாக்களிப்பு முடிவடைந்தது. நவம்பர் 4 ஆம் திகதி விடிய ஒரு மணி அலாஸ்கா மாநிலத்தில் வாக்களிப்பு முடிவடைந்தது.

**ஒவ்வொரு மாநிலத்திலும் வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கி அறிவிக்கப்படும். மாநிலங்களுக்கிடையே உள்ள நேர வேறுபாட்டின் காரணமாக அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையில் உள்ள பெரும்பாலான வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு முடிந்து வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும் நிலையில், மேற்கில் வாக்களிப்பு நடந்துகொண்டிருக்கும்.**

## வாக்குப்பதிவு முறைகளும் வாக்கெண்ணலும்

வாக்குப்பதிவு முறைகளும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. வாக்குப்பதிவுகள் பொதுவாக மூன்று முறைகளில் நடக்கின்றன. அவை கையால் குறிக்கப்படும் காகித வாக்குகள், நேரடி மின்னணு வாக்குப் பதிவுகள் மற்றும் கையால் எண்ணப்படும் காகிதவாக்குகள் ஆகும். வாக்குப் பதிவு முறை வேறுபடும் போது வாக்கெண்ணல் முறையும் வேறுபடும்.

கையால் குறிக்கப்படும் காகித வாக்குகள் **(Hand Marked Paper Ballots )**. இது **Optical Scan Paper Ballot Systems** (ஒப்டிகல் ஸ்கான் பேப்பர் வாக்கு முறைகள்) என்றும் அழைக்கப்படுகின்றன. இம் முறையில் வாக்காளர்கள் ஒரு வாக்குச் சீட்டில் ஒரு ஓவல் வடிவமான பெட்டி அல்லது ஒத்தவடிவத்தை (பென்சிலால் நிறம் தீட்டி) நிரப்புவதன் மூலம் தங்கள் வாக்குகளை குறிக்கின்றனர். இக்காகித வாக்குச் சீட்டுகள் வாக்களிப்பு நிலையத்தில் அல்லது மத்திய நிலையத்தில் ஸ்கான் **(scan)** செய்யப்பட்டு கணக்கிடப்படுகின்றன.

**வாக்குப்பதிவு முறைகளும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. வாக்குப் பதிவுகள் பொதுவாக மூன்று முறைகளில் நடக்கின்றன. அவை கையால் குறிக்கப்படும் காகிதவாக்குகள், நேரடிப் மின்னணு வாக்குப் பதிவுகள் மற்றும் கையால் எண்ணப்படும் காகித வாக்குகள் ஆகும். வாக்குப் பதிவு முறை வேறுபடும் போது வாக்கெண்ணல் முறையும் வேறுபடும்.**

நேரடிப்பதிவு மின்னணு (Direct Recording Electronic (DRE) Systems) முறையில் கணனிகளின் நினைவகத்தில் நேரடியாக வாக்குகளைப் பதிவு செய்யும் கணனிகள் பயன்படுத்தப்பட்டு வாக்குகள் கணக்கிடப்படுகின்றன. (தொடரும்...)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்-2020

வாக்களிப்பு முடிந்த நேரங்கள்

| கிழக்கு நியம நேரத்தின்படி (EST) | மாநிலங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 3 ஆம் திகதி | |
| இரவு 7 மணி | 6 |
| இரவு 7.30 மணி | 3 |
| இரவு 8 மணி | 16 |
| இரவு 8.30 மணி | 1 |
| இரவு 9 மணி | 14 |
| இரவு 10 மணி | 4 |
| இரவு 11 மணி | 4 |
| இரவு 12 மணி | 1 |
| 4 ஆம் திகதி விடிய 1 மணி | 1 |

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க தயாராகும் மைத்திரி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, 2025 இல் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்று அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய அரசியல் கூட்டணியொன்றைக் கட்டியெழுப்பி ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராவதற்கான கலந்துரையாடல்களை அவர் ஆரம்பித்துள்ளார் என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் அவர், அங்கு இருந்துகொண்டே கூட்டணி அமைப்பதற்கான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றார் என்றும் சில தினங்களுக்கு முன்னர் இது தொடர்பாக தனது இல்லத்தில் அரசியல் கட்சிகள் சிலவற்றுடன் மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடல் நடத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)



# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## சிவ மூலிகைகளின் சிகரம் - வில்வம்

(தொடர்ச்சி)

அதாவது வில்வத்தின் துணை கொண்டு சிவபெருமானை எளிதாக நாம் அணுக முடியும். வில்வத்துக்கு மட்டும் எப்படி இந்த சிறப்பு கிடைத்தது என்று நீங்கள் யோசிக்கலாம். அதற்கு சில காரணங்கள் உதாரணமாக கூறப்படுகின்றன.

சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை. இது சுடும் வெப்பத்தைக் கொடுக்கக்கூடியது.

இதனால் ஈசனை சாந்தப்படுத்தவும் குளிர்ச்சிப்படுத்தவும் முனிவர்கள், ரிஷிகள் வில்வ தளத்தை பயன்படுத்தினார்கள். வில்வம் குளிர்ச்சியூட்டும் குணமுடையது.

வில்வத் தளங்களால் ஈசன் குளிர்ச்சியைப் பெற்றார். எனவே தான் வில்வம் சிவபெருமானுக்குப் பிடித்தமானதாக மாறியது.

வில்வ இலைகளுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. இதை உண்டால் நமது உடலில் இருந்து அதிக சக்திகள் வெளியாகாது. ஜீரணம் செய்த சக்தி கூட சேமிப்பாகிவிடும்.

இதன்மூலம் சிவத்துக்குள் அதிக சக்தியை சேமிக்கச் செய்யும் ஆற்றல் வில்வ தளங்களுக்கு இருப்பதை நம் முன்னோர்கள் கண்டு பிடித்தனர்.

எனவே சிவார்ச்சனைக்கு மற்ற மலர்கள், இலைகளை விட வில்வ தளங்களை பயன்படுத்தினார்கள். வில்வம் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றதால் "சிவமூலிகைகளின் சிகரம்" என்றழைக்கப்படுகிறது.

மூன்று இலைகளைக் கொண்ட வில்வ தளத்தை சிலர் தனித்தனியாக கிள்ளி பிரித்து விடுவதுண்டு. அப்படி செய்யக்கூடாது. மூன்று இலை கொண்ட வில்வ தளத்தை அப்படியே அர்ச்சனை மற்றும் வழிபாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும்.

அப்படி வில்வ தளத்தைப் பயன்படுத்தினால் தான் அதில் சேமிக்கப்படும் அதிர்வலைகள் நமக்குக் கிடைக்கும். இந்த அதிர்வலை இடமாற்றம் எப்படி நிகழ்கிறது தெரியுமா?

ஆலயங்களில் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படும் மூலமூர்த்தியானது அஷ்டபந்தனம், இராஜகோபுரம், கும்பாபிஷேகம் மூலம் எப்போதும் அதிர்வலைகளுடன் இருப்பதை நீங்கள் அறிந்து இருப்பீர்கள்.

பழைமையான சிவாலயங்களில் ஈசனிடம் இருந்து வெளிப்படும் அதிர்வு அதிகம் இருப்பதை பலரும் அனுபவபூர்வமாக அறிவார்கள்.

அத்தகைய அதிர்வு கொண்ட ஆலயங்களில் லிங்கத்தின் மீது போடப்படும் வில்வ தளங்கள், அந்த அதிர்வுகளை தம்முள் கிரகித்து வைத்துக் கொள்ளும்.

பூஜை முடிந்து அர்ச்சகர் அந்த வில்வ தளத்தை நம்மிடம் தரும் போது பக்தியுடன் வாங்கி சட்டைப்பை அல்லது கைப்பைக்குள் வைத்துப் பாருங்கள்.

வில்வ இலைகளில் தேங்கியுள்ள ஈசனின் அதிர்வலைகள் நம் உடலுக்குள் ஊடுருவும்.

அந்த அதிர்வலைகள் அபார சக்தி கொண்டவை. அது நமது உடலிலும் உள்ளத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விடும்.

வில்வ தளங்களுக்கு மட்டுமே இப்படி மூலவர் சிலையில் இருந்து நம்மிடம் அதிர்வலைகளை கொண்டு வந்து சேர்க்கும் ஆற்றல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 16 கைதிகளுக்கு கொரோனா

(கொழும்பு)

சிறைச்சாலைகளிலிருந்து மேலும் 16 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட அனைத்து கொரோனா நோயாளர்களும் பெண் கைதிகள் எனச் சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்சமயம் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது 4747 ஆக உயர்வடைந்துள்ளது. (நி-4)

## கஞ்சாத் திரவப்போத்தல்கள் பறிமுதல்

(கொழும்பு)

பெலவத்த பகுதியில் கஞ்சா திரவம் அடைக்கப்பட்ட ஆறு திரவப் போத்தல்களுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட கஞ்சா திரவத்தின் பெறுமதியானது 2.5 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## 291 பேர் மீண்டும் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

தொழில்வாய்ப்புக்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு சென்று பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் இலங்கைக்கு திரும்ப முடியாது பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான மேலும் 291 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் விசேட திட்டத்தின் கீழ் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 300 | 450 |
| தக்காளி | 250 | 250 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 70 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 160 | 180 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 180 | 160 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 200 | 150 | 240 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 150 | 160 | 150 |
| லீக்ஸ் | 130 | 140 | 120 | 150 |
| பீற்றூட் | 120 | 170 | 150 | 150 |
| கறிமிளகாய் | 250 | 300 | 350 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 100 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 80 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 140 | 20 | 30 |
| ஈரப்பலா | 150 | 100 | 60 | 100 |

# வெண்ணிற உடையில் வந்தவர்களால் சாவகச்சேரியில் சற்றுநேரம் பரபரப்பு

(சாவகச்சேரி)


சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை உண வருந்துவதற்காக ஒதுங்கிய பெரும்பான்மையின மக்களால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

யாழில் இருந்து வாகனங்களில் வந்த குறித்த மக்கள் நுணாவில் பகுதியில் ஏ9 வீதியோரமாக குளக்கரை ஒன்றுக்கு அருகாமையில் காணப்பட்ட சிறிய இந்து ஆலயத் தடியில் ஒன்றுகூடியமையால் இந்த பரபரப்பு ஏற்பட்டது.

அவ்வாறு ஒன்றுகூடியவர்கள் ஆண்-பெண், சிறியவர்-பெரியவர் என வேறுபாடின்றி சகலரும் வெண்ணிற ஆடை தரித்திருந்தமையால் அப்பகுதி மக்கள் மத்தியில் பௌத்த மயமாக்கல் நட வடிக்கை முன்னெடுக்கப்படப் போவதாக அச்ச நிலை தோன்றியமையே பரபரப்பு ஏற்படக் காரணமாக அமைந்தது.

இருப்பினும் அவ்வாறு வாகனங்களில் வந்த மக்கள் சிறிது நேரத்தில் உணவருந்திய பின்னர் அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றனர். (5-30)

# அறுவடை காலத்தில் மழை நெற்கதிர்கள் நாசம்



(தருமபுரம்)

வடக்கின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் திடீர் என பெய்த மழை காரணமாக பல விவசாயிகள் அறுவடை செய்த நெல்லினை கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும் பலரது நெல்கள் மழையில் முழுமையாக நனைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதிகளில் மழையின்றி தண்ணீர் பம்பிகள் மூலம் தண்ணீர் பயிர்களுக்கு பாய்ச்ச வேண்டியநிலை ஏற்பட்டது. தற்பொழுது அறுவடை நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் திடீர் எனமழை பெய்ததன் காரணமாக பல விவசாயிகள் பதிக்கப்பட்டுள்ளதுடன் நெல்லினை உலரவிடத்தளம் இல்லாமல் வீட்டு முற்றம், வீதியோரம் பொது இடங்களில் நெல்லை உலரவிடவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு நனைந்த நெல்லினை குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (5-316)

# நூல் வெளியீட்டு விழா

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச கலாசாரபேரவை மற்றும் கலாசார அதிகாரசபை இணைந்து ஏற்பாடு செய்துள்ள "வவுனியம்-04"கலை இலக்கிய பண்பாட்டு நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமாரும், கௌரவ விருந்தினராக நாதஸ்வர வித்துவான் மு.சண்முகநாதனும் கலந்து கொள்வர். (5-299)





"இழப்பே இனி எம் பலமாய்" எனும் தொனிப்பொருளில் உலக தாய்மொழி தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கலை பண்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் தாய்மொழி தின நிகழ்வுகள் இடம்பெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக, வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொண்டிருந்த அதேவேளை சிறப்பு விருந்தினராக முன்னாள் தமிழ்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் கலந்து கொண்டார். (படங்கள்- சிவசாந்தன்)

# விவசாய நிலங்களில் மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க கோரும் மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊரியான் கோரக்கன்கட்டு ஆகியபகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவ காவலரண்களை அமைக்குமாறு பிரதேச விவசாயிகளும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊரியான் கோரக்கன் கட்டு ஆகிய பகுதிகளில் கடந்த 15 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது;

குறிப்பாக இந்த பகுதிகளில் கால நெற்செய்கை அறுவடைகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வயல் நிலங்களிலும் ஆற்றுப்படுகைகளிலும் இவ்வாறான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மணல் அகழ்வில் ஈடுபடும் உழவு இயந்திரங்கள் மற்றும் டிப்பர் வாகனங்கள் அறு வடை செய்யப்படாத காணிகள் ஊடாகவும் சட்டவிரோத மாக மணலை ஏற்றிச் செல்கின்றன.

இந்த விடயத்தில் பொலிஸ் உயர் அதிகாரிகள் உரிய கவனம் எடுத்து விவசாய நிலங்களையும் கிராமிய வீதிகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். இந்த பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்தும் வகையில் இராணுவ காவலரண்களை அமைக்குமாறும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை விவசாய அமைப்புகளும் கிராம மட்ட அமைப்புகளும் குறித்த பகுதியில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் வகையில் இராணுவ காவலரண்களை அமைக்குமாறு இராணுவத்தினர் மற்றும் உய ரதிகாரிகளுக்கான கடிதங்களை அனுப்பிவைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன. (5-4-315)

# ஆண்டாங்குளத்தில் விவசாயத்திற்கு அனுமதி தரவும்

(அக்கராயன்)

முல்லைத்தீவின் கரைதுறைப்பற்றின் பூர்வீக கிராமமான ஆண்டாங்குளத்திற்கு மக்கள் சென்று வருவதற்கும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்கு கரைதுறைப்பற்றின் பிரதேச சபையின் உறுப்பினர் உ.றனிஸ்லா கடிதம் கையளித்துள்ளார்.

ஆண்டாங்குளம் கிராமத்தில் 1984ஆம் ஆண்டிற்கு முன்பு நான்கு தலைமுறையினருக்கு மேல் வாழ்ந்து வந்தார்கள். 1984ஆம் ஆண்டு போர்ச்சூழல் காரணமாக இக்கிராமத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து விட்டனர்.

அதன் பின்பு இடம் பெயர்ந்த மக்களினால் தமது சொந்த கிராமமான ஆண்டாங்குளத்திற்கு செல்ல முடியாத நிலைமை உள்ளது. தமது பூர்வீகக் கிராமத்திற்கு சென்று வரவும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் முடியாத காரணத்தினால் குறித்த மக்கள் ஆண்டாங்குளத்திற்குச் சென்று வரவும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் குறித்த கிராமத்தினை விடுவித்து தருமாறும் கோருகின்றேன் என கையளிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-350)



யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்தா பொதுசந்தையில் தற்போது காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாநகர சபையின் புதிய முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு வியாபாரிகளுடன் கலந்துரையாடினார்.



நாவாந்துறை சென். மேரிஸ் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத் ததான முகாம் நேற்று ஞாயிற்று க்கிழமை நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்: ரவிசாந்)

சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விஷயத்திலும் தொடருவான்!

– இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவு எங்களிடம் உண்டா?

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கை வெளியாகியுள்ளது.

பிரஸ்தாப அறிக்கை ஈழத் தமிழர்களின் அவலத்துக்கு ஒத்தடம் கொடுப்பதாக இல்லை என்பதைப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையும் தமிழ் மக்களை வஞ்சித்து விடும் என்பதைத் தவிர, அதுபற்றி நாம் வேறுஎதனைத்தான் குறித்துரைக்க முடியும்.

இனம் இனத்தோடு என்பதுபோல, நாடுகள் நாடுகளோடு என்பதுதான் உண்மை. அதனால் தான் இந்த உலகில் இன்னமும் இன, மத, நிற, மொழிகளின் பேரால் மனித அவலங்கள் நடந்தாகின்றன.

எளியாரை வலியார் எவ்வளவுக்கு வதை செய்தாலும் அதனைக் கண்டு கொள்வதற்கு இந்த உலகில் யாரும் இல்லை என்பதுதான் யதார்த்தம்.

இருந்தும் உலகில் சமாதானத்தையும் அமைதியையும் பாதுகாக்கின்ற நோக்கில்; இயங்குகின்ற ஐ.நா சபையிடம் இருந்தும் நீதிகிடைக்கவில்லை எனும்போது, மேற்போந்த அமைப்புகள் மீது வெறுப்பும் கோபமும் உண்டாகின்றதே தவிர அவற்றின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை.

இவையாவற்றுக்கும் மேலாக, சிறுபான்மை இன மக்கள் அடிமைப்பட்டு வாழ்வதையும் அந்த மக்களைப் பெரும்பான்மை இனங்கள் வேட்டையாடுவதையும் நியாயப்படுத்துவதற்காக சர்வதேச பொதுஅமைப்புகள் இயங்குகின்றனவா? என்ற சந்தேகமும் எழவே செய்கிறது.

இவை ஒருபுறமிருக்க, உலக நாடுகளும் ஐ.நா சபை போன்ற சர்வதேச அமைப்புகளும் எங்களைக் காப்பாற்றும். எங்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும். வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்தேறிய, போர்க்குற்றங்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுமென்று மலையாக நம்புகின்ற நம் தமிழ்த் தரப்புகள், அதற்காக ஆற்றிய எதிர்வினை என்ன? என்றால் எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை.

ஆம், உள்நாட்டுக்குள் நின்றுகொண்டு அறிக்கை விடுவதிலும் தேர்தல் அரசியல் நடத்துவதிலும் அகமும் புறமும் முரண்பட்டுக் கொள்வதிலும் நம் தமிழ் அரசியில் தரப்புகள் தீவிரம் காட்டுகின்றனவே தவிர,

அவை சர்வதேச நாடுகளுடன் இராஜதந்திர உறவைப் பேணுவதிலோ வெளிநாடுகளில் உள்ள துறைசார் நிபுணர்களுடனும் வெளிநாட்டு மனித உரிமைகள் அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி எங்களின் அவலங்களை எடுத்துரைப்பதையோ செய்யவில்லை.

சுருங்கக்கூறின் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து எங்கள் நிலைமையை எடுத்துரைக்கின்ற வேலை யாவது நடந்ததா? என்றால் அதுவும் இல்லை.

ஆக, இவற்றில் கவனம் செலுத்தாமல்; உட்கட்சிப்பூசல்களோடு இருக்கின்ற நம் தமிழ் அரசியல் தரப்புகள், ஐ.நா மனித உரிமைகள் போன்ற அமைப்புகளின் அறிக்கை காத்திரமாக வெளிவரும் என்று கனவு காண்பதில் ஏதேனும் பொருத்தப்பாடு இருக்கின்றதா என்ன?

# யு.என்.எச்.சி.ஆர். இன் ஆரம்பத் தீர்மானத்தில் தமிழர் பற்றிக் குறிப்பிடாதது வருத்தமளிக்கிறது

## காணாமல் போனவர்களின் உறவுகள்

(நெளுக்குளம்)

யு.என்.எச்.சி. ஆரின் ஆரம்பத் தீர்மானத்தில் தமிழ் அல்லது தமிழர்கள் பற்றி எதுவும் குறிப்பிடாமை வருத்தம் அளிப்பதாக வவுனியாவில் கடந்த 1465 நாட்களாக தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், பொத்துவில்முதல்பொலிகண்டி வரையிலான அமைதியான ஆர்ப்பாட்டத்தை கொழும்பு சார்ந்த செய்தி ஊடகங்கள் இருட்டடிப்பு செய்ததற்காக கண்டனம் தெரிவித்த அமெரிக்க தூதர் டெப்லிட்ஸினுக்கு நன்றி கூற விரும்புகிறோம். இது எங்கள் அமைதியான மற்றும் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தையும் போராட்டங்களையும் தொடர்வதற்கு ஊக்குவிக்கிறது.

யு.என்.எச்.ஆர்.சி அமர்வுக்கு முன்னதாக ஒரு அரசியல் தீர்வு குறித்து சிங்கள அரசாங்கத்துடன் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கையை நாங்கள் கண்டிக்கிறோம். இது தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து பணியாற்றலாம் என்பதை உலகிற்கு காட்டுகிறது.

தமிழர்களுக்கு அமெரிக்கா அல்லது இந்திய தலையீடுகள் தேவையில்லை என்பதை அது வலியுறுத்துகிறது. இலங்கைக்கு எதிரான எந்தவொரு வலுவான தீர்மானத்தையும்நீக்குவதற்கான ஒரு பொறியே இது.

யு.என்.எச்.சி.ஆரின் ஆரம்பத் தீர்மானம் ஐ.சி.சி. மற்றும் வாக்கெடுப்பின் தேவையை நிவர்த்திசெய்யவில்லை என்பதில் நாங்கள்வருத்தப்படுகிறோம். அவர்களின் தீர்மானத்தில், தமிழ் அல்லது தமிழர்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இந்த தீர்மானம் தமிழர்களை சங்கடப்படுத்துகிறது அத்துடன் இது பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர்களுக்கும் எந்த மரியாதையும் கொடுக்கவில்லை.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தனது நினைவுக் குறிப்பில் ஐ.நா. எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க இயலாது என்று எழுதினார். ஐ.நாவின் முன்னாள் உதவி பொதுச் செயலாளர் சார்ல்ஸ் பெட்ரி கூட இலங்கையைத் தண்டிக்க ஐ.நா.வுக்கு தைரியம் இல்லை என்று அறிக்கை வெளியிட்டார்.

1465 நாட்களுக்கும் மேலாக தமிழர்களுக்கும் நமது தமிழ் அரசியல்வாதிகளுக்கும் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் விடயமே இது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவை, தமிழர்களின் அரசியல் தீர்வுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவி புரியுமாறு அழைப்பு விடுத்திருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

(5-6-250-299-315)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** வலலாய், பலாலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நயினா தீவு தபாலக வீதி, நயினாதீவு முருகன் கோவில் வீதி, நயினாதீவு பிரதான வீதி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம்வரை, ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கொக்குப்படையானிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம்கடற்படைமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்வாங்கு வாழ வழி



நாம் வாழும் காலத்தில் உடலையும் மனத்தையும் சரிப்படுத்திக் கொண்டால், நமக்குப் பின்னாலே பிறக்கக் கூடிய குழந்தைகள் எப்படியிருக்கும் இன்று பார்த்தீர்களானால் அவை ஆரோக்கியமான கட்டமைப்புக் (structure) கொண்டதாகத் திகழும்.

அவ்வாறு நல்ல குழந்தைகளை உலகுக்குத் தருவதற்கு நமது உடற்பயிற்சி, தியானமுறை இரண்டும் வாய்ப்பு அளிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்போது, ஊதியம் தராத உடற்பயிற்சி, தியானம் இவற்றை முதலில் நிறுத்தி விடலாம் என்று எண்ணாது, உள்ளூர இயங்கி வரும் இறைச் சக்திக்குத் தொண்டு செய்யும் வகையிலே உடற்பயிற்சி, உளப் பயிற்சி செய்து நாளுக்குநாள் மகிழ்ச்சியும் இனிமையும் பெற்று வாழ வேண்டும்.

தினந்தோறும் நாம் காலையிலிருந்து மாலைவரை குடும்பத்தில் பலவகைப் பொருட்களையும், பண்டங்களையும் கையாளுகின்றோம். சமையல் பாத்திரங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன். சுத்தப்படுத்தி வைத்தால் தானே அவை மறுநாளைக்கு உதவும்? அதேபோல தினந்தோறும் மனத்தையும், உடலையும் உபயோகிக்கிறோம் அவற்றில் அவ்வப்போது ஏற்படக்கூடிய களங்கங்களைப் போக்கி, மீண்டும் புதிதாக நாளைய உபயோகத்திற்குத் தயாராக வைத்துக் கொண்டால் தானே நன்றாக இருக்கும்?

உடலுக்குக் கொடுக்கக்கூடிய உடற்பயிற்சி, மனதிற்குக் கொடுக்கக் கூடிய தியானப்பயிற்சி, உயிர்க்குறுதி அளிக்கும் காயகல்பப்பயிற்சி இம்மூன்றும் உடலையும், உள்ளத்தையும், உயிரையும் மேன்மைப்படுத்தி மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி வகுப்பனவாகும்.

## ஆறு மாதங்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சீனச் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

இவ்வருடத்தின் இறுதி அரையாண்டில் சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சீனாவுக்கான இலங்கை தூதுவர் கலாநிதி பாலித கோஹன தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இவற்றுக்கான விமானப் பயணங்களை ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் கலாநிதிபாலிதகோஹன சுட்டிக்காட்டினார்.

ஆறுமாத காலத்தில் சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவார்கள். அதன் ஊடாக எமக்கு பாரியதொரு அந்நிய செலாவணி நாட்டுக்குள் வரும். அதுமட்டுமன்றி சீனாவிலிருந்து வருடமொன்றுக்கு 159 மில்லியன் மக்கள் சுற்றுலாப் பயணிகளாக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர்.

அதில் ஒரு வீதத்தை இலங்கைக்கு எடுத்துக் கொண்டாலும் இலங்கையின் பொருளாதாரம் பாரிய முன்னேற்றத்தை அடைந்து விடும்.

எனவே நாம் அந்த அடைவு மட்டத்தை அடைவதற்காக பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எனவே இவ் ஆண்டின் இறுதி அரையாண்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சீனச் சுற்றுலா பயணிகள் இலங்கை வருவார்கள் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் என்றார். (நி-4)

## பாம்பு தீண்டியதில் இரண்டு மாத சிசு உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, சின்னப் புல்லுமலை பகுதியில் பாம்பு தீண்டியதால் இரண்டு மாதங்களேயான ஆண் சிசு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலையில் மயக்க நிலையில் இருந்த குறித்த குழந்தையை பெற்றோர் உடனடியாக செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர்கள் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னரான குழந்தையின் பிரேத பரிசோதனையில் உள்ளங்கையில் பாம்பு தீண்டியிருப்பது தெரியவந்துள்ளது. (நி-4)

## ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்குங்கள்

### சர்வதேச மன்னிப்புச்சபை கடிதம்

(கொழும்பு)



கொரோனா வைரஸ்தொற்றினால் உயிரிழப் போரின் சடலங்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் ஆகிய இரண்டுக்கும் அனுமதி வழங்குமாறு வலியுறுத்தி பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமனவிற்கு சர்வதேச மன்னிப்புச்சபை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி குறித்து நீங்கள் கவனம் செலுத்தவேண்டும்.

கொரோனா வைரஸ்தொற்றினால் உயிரிழப்பவர்கள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவர்களின் உடல்களைக் கட்டாயமாகத் தகனம் செய்யவேண்டும் என அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொள்கை எமக்குப் பெரிதும் விசனமளிக்கிறது.

ஆனால் கடந்த 2020 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களில் சடலங்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் ஆகிய இரண்டுக்கும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

அதுமாத்திரமன்றி உலக சுகாதார ஸ்தாபனமும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவும் அடக்கம் செய்வதற்கும் தகனம் செய்வதற்கும் அனுமதியளித்துள்ளது.

இஸ்லாமிய மத நம்பிக்கைகளின் பிரகாரம், ஒருவர் உயிரிழந்த பின்னர் அவருக்கு வழங்கப்படும் இறுதி மரியாதையே அடக்கம் செய்வதாகும்.

எனினும் முஸ்லிம்களின் மதநம்பிக்கைக்கு முரணான வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டாயத் தகனம் என்ற கொள்கைக்கு இதுவரையில் அரசாங்கம் நியாயமான காரணங்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதன் விளைவாக நிலத்தடி நீரின் ஊடாக வைரஸ் தொற்று பரவலாம் என்று தொற்றுநோய் வைத்திய நிபுணர் சுக்த் சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் நீரினூடாக கொரோனா வைரஸ் பரவாது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ்தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கும் தகனம் செய்வதற்கும் அனுமதியளிக்கும் அதேவேளை, இதுவிடயத்தில் தற்போது பின்பற்றப்படும் அடக்குமுறைக்கொள்கையை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## பாக். பிரதமரின் பாராளுமன்ற உரை இரத்துச் செய்யப்பட்டமை நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும்-பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் பாராளுமன்ற உரை இரத்துச் செய்யப்பட்டமை இராஜதந்திர ரீதியில் நாட்டிற்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இராஜதந்திர தவறுகளை இழைப்பதில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கிறது என்றும் சாடியிருக்கிறார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உரையாற்றவிருந்த நிலையில், அது இரத்துச்செய்யப்பட்டுள்ளது. இது நாட்டிற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

இலங்கையின் நீண்டகால நட்பு நாடாக பாகிஸ்தான் இருந்து வருகிறது.

மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த சர்வதேசத் தொடர்புகள் என்பவை இராஜதந்திர ரீதியில் மிகவும் மதிப்பு வாய்ந்த சொத்துக்களாகும். அவற்றை ஆட்சியாளர்கள் சீர்குலைக்கக்கூடாது.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இராஜதந்திர தவறுகளை இழைப்பதில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி-4)

# நல்லூர் புரொன்கொஸ் இறுதிக்கு முன்னேற்றம்




ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணத் தொடரில் **Play off** சுற்றில் **Qualifier- 01** போட்டி நேற்று முன்தினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது நல்லூர் புரொன்கொஸ் அணி, யாழ். றோயல் அணியை மூன்று இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். றோயல் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் புரொன்கொஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. இதுவே இத் தொடரில் ஆகக்கூடிய ஓட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்கோகன்-37, பானுஸன்-13, பிரியலக்ஸன்-42, பிரதீப்-12, கஜீபராஜ்- 17 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.றோயல் அணியைச் சார்ந்த வாமணன்-01, ஜின்துஜன்-01, சுஜன்-01, பிரசன்னா-03 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். றோயல் அணி 20 ஓவர்களில் 09 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. சந்தோஸ்-11, கௌதமன்-24, யனுதாஸ்-44, கிரிஷாந்-14, பிரியலக்ஸன்-30, வாமணன்-17 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் நல்லூர் புரொன்கொஸ் அணியைச் சார்ந்த பிரதீப்-03, குகதாஸன்-02, ஜேம்ஸ், டார்வின் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.



இவ்வணி இன்று நடைபெறும் **(Qualifier -02)** போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற இருக்கும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும். (4)

## தொண்டை...

எது.

சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குப் பின்பு கடலில் இருந்து மாணவன் மீட்கப் பட்டார்.

உடுப்பிட்டி சந்தைப் பகுதியைச் சேர்ந்த நல்லைநாதன் அவர்காஸ் (வயது-17) என்ற மாணவனே கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா-60)

## சந்திரிகா, மைத்...

மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரையும் இணைத்துக் கொண்டு ஜெனிவாப் பிரச்சினையை எதிர் கொள்வதற்கு அரசு முன்வர வேண்டும்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபே சிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், ஐ.நா. பொதுச்செயலாளராக செயற்பட்ட பான் கீ மூனும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர்.

அதன் விளைவாகவே தாருஸ்மன் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நாம் ஏற்கவில்லை. போரின்போது சிற்சில சம்பவங்கள் இடம்பெறக்கூடும்.

அதனை அடிப்படையாகக்கொண்டு படையினர் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதை ஏற்க முடியாது. அதேபோல உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதையும் நாம் அனுமதிக்கமாட்டோம். எந் நேரத்திலும் நாட்டுக்காக முன்னிலையாவதற்கு தயாராகவே இருக்கின்றோம் என்றார். (ஞா)

## இளம் பெண்...

மாதம் 11ஆம் திகதி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

மூளாய் பகுதியைச் சேர்ந்த சாந்த சீலன் மேரிரெஜினா (வயது-26) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஞா-104)

## பட்டப்பகலில்...

யில்,

குறித்த வீட்டு உரிமையாளர் கொல்லங் கலட்டிக்கு தோட்ட வேலைக்கு சென்றுள்ள நிலையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் வீட்டு கதவினை உடைத்து குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-104)

## ஆசிரியைக்கு...

நேற்றைய தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் குறித்த தொற்றாளர் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ஞா-60)

## சர்வதேச சக்தி...

இலங்கையின் பொருளாதாரத்தில் தலையிடுவதற்கு சில மேற்குலக நாடுகளும் சில அமைப்புகளும் எதிர்பார்க்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக, வரலாற்றில் முதல் முறையாக ஜெனிவா கூட்டத்தொடர் இணைய வாயிலாக இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## அனைத்து தமிழ்...

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய 10 கட்சிகள் நேற்றைய தினம் சந்தித்து இன்று இருக்கக்கூடிய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் வந்திருந்த முதலாவது வரைவு தொடர்பாகவும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல விடயங்களை ஆராய்ந்து இருந்தோம்.

அதில் முக்கியமாக இரண்டு விடயங்கள் பேசப்பட்டு இருக்கின்றது. வருகின்ற 26ஆம் திகதி வவுனியாவில் தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய தமிழ் கட்சிகளும் அதேபோல கிறிஸ்தவ, இந்து பெரியார்களும் முக்கியமாக வடகிழக்கில் இருக்கக்கூடிய கிறிஸ்தவ ஆயர்கள் அதே போல தமிழ் இந்து பரப்பில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட ஆதீன முதல்வர்களும் சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து பல தரப்பினரும் இணைந்து எதிர்வரும் 26ஆம் திகதி வவுனியாவில் பேச உள்ளோம் என்றார் (ஞா-33)

## வடக்கில் 6 பேரு...

செய்யப்பட்டிருப்பதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இருவருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மூவருக்கும் கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர் ஒருவருக்குமாக வடக்கில் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். (ஞா-18,33,60)

## 10 பேர்...

உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப் படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 445ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## தொலைத்...

யாளர் சேவை நிலையத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றுபவருக்கே இவ்வாறு தொற்று உள்ளமை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அந்த நிறுவன அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஞா)

## மாண...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோய்த் தொற்று அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்,

மரண வீடு ஒன்றில் பங்கு கொண்டதாகவும் குறித்த மரண வீட்டிற்கு வெளி மாவட்டத்தினைச் சேர்ந்த பலர் வந்து திரும்பியதாக தெரிய வந்ததாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த மரண வீட்டில் பங்குகொண்ட ஏனையவர்கள் மற்றும் பாடசாலையில் மாணவனுடன் நெருக்கமாக

## ரூ.2 லட்சம்...

யில் மரணச் சடங்கில் இரண்டு லட்சம் ரூபாய் பணம் திருட்டுப் போயுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அச்செழுப் பகுதியில் கடந்த 19ஆம் திகதி விபரீத முடிவெடுத்து உயிரிழந்த இளம் வர்த்தகரின் மரணச் சடங்கு நேற்று நடைபெற்றது.

இதன்போது அதிகளவான மக்கள், வர்த்தகர்கள் குறித்த மரணச் சடங்கில் கலந்து கொண்டிருந்தவேளை வீட்டில் உள்ள அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஞா)

## பிரஜாவுரிமை...

டைத்தாலும் வாழ்வின் இறுதி வரை எமது போராட்டம் தொடரும்"

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"ஜனநாயக ரீதியாகச் செயற்படுகின்ற வர்களுக்கு எதிராகவும், அவர்களுக்குச் சவால் விடுக்கும் வகையிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசித்திரமான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எமது குடும்பம் சார்ந்த மோசடிகளில் யாரும் தலையிடாதீர்கள் என்று எச்சரிக்கும் வகையிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார். (ஞா)

## பழகியவர்கள்...

பழகியவர்கள் போன்றோர் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் படக்கூடும் என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஞா)


தன நிதானய
திகதி -2021.02.21
சீட்டிழுப்பு இலக்கம் - 442
F 06 23 28 75
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 21.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2700
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 37 39 63 71

மஹஜன சம்பத
திகதி 2021/02/21
சீட்டிழுப்பு இலக்கம் 4405
S 2 2 5 8 0 5

செவன
திகதி 21/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 316
V 14 18 40 54

அத கோடிபதி
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1201
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 21.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 110,454,470
வெற்றி இலக்கங்கள் 34 35 55 71 — ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3531
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 21.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,840,074
வெற்றி இலக்கங்கள் 20 29 49 60 — ஆங்கில எழுத்து D
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,185,337/=
திகதி : 21.02.2021
வெற்றி இலக்கம் : 3082
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 10 12 22 54 — சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 94,80,660

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1375 — நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 21/02/2021 — தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 06 25 30 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் 70,173,796/=

ஜயோதா / சப்பிரம
சீட்டிழுப்பு வாரம் 693
மஞ்சள்
21.02.2021
ஞாயிறு
H 27 64 67 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,766,440
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எதிராக உள்ள நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை.)

(5872)

**077 961 7170**

**அண்ணா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500

(C-1476)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**ராஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: ராஜ் - 077 679 6623

(5861)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொழிற்சாலை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

(5866)

**076 329 0663**

**FALC FRENCH LANGUAGE CENTRE**

பிரெஞ்ச் Courses (DELF A1, A2, B1, B2)

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma

V. ஜெகன் (Trained in France)

(C-1455)

19, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

23\2, சோமசுந்தரம் அவெனியு, கண்டுகுளி. 0779789456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1, B1, Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1456)

0768226240 DHL

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 3536

**அருள்**

இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.

தொ.பே:- 076 443 1576

(C-1488)

2020 O/L

மாணவர்களுக்கான மாபெரும் விசேட இறுதிக் கருத்தரங்கு

விஞ்ஞானம் : ஆசிரியர் S. கோபிநாத்

காலம் :- 22, 23 ஆம் திகதிகளில் பிற்பகல் 3.30 மணி முதல் 6.30 மணி வரை

இரு நாட்களுக்கும் ரூபாய் 500 /= மட்டும்

**குறிப்புகள் :-**

01. ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ளமுடியும்.
02. எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன் கையேடுகளாக வழாங்கப்படும்.
03. தரம் 10 இன் 20 பாட அலகுகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.
04. சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மாணவர்கள் கலந்து கொள்ளவும்.

(5868)

**தீபம் கல்வி நிலையம்**

டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

**077 224 7781** நிர்வாகம்

**DELIVERY BOYS தேவை**

முழு நேரம் & பகுதி நேரம்




யாழ்ப்பாணத்தில் Food Delivery செய்யும் Cookoo நிறுவனத்திற்கு முழுநேர மற்றும் பகுதி நேரத்திற்கான Delivery Boys தேவை!

ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் மேலதிகமான விபரங்களை அறிந்துகொள்ள விரும்புவோர் கீழ் காணும் இலக்கம் மூலமாக தொடர்பு கொள்ளுங்கள்.

(5844)

தொடர்புகளுக்கு

+94 77 640 2343 /cookoo.lk


# மரண அறிவித்தல்



பிறப்பு : 20. 01. 1954

இறப்பு : 13. 02. 2021

## அமரர். விஸ்வநாதன் விஸ்வகுமார் (குமார்)

**(தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழையமாணவர், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இந்து இளைஞர் சபை உறுப்பினர்)**

யாழ்.தெல்லிப்பழை கம்பனையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதன் விஸ்வகுமார் (13. 02. 2021) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் யாழ்.சண்டிலிப்பாய் இந்து கல்லூரி (Raja school) ஸ்தாபகரான காலஞ்சென்ற ஜெகராஜசிங்கம் செல்வநாயகி, காலஞ்சென்ற இரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு பேரனும், காலஞ்சென்ற விஸ்வநாதன் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், யாழ். ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணேஸ்வரி (இந்திரா) யின் அன்புக் கணவரும், தரன் (லண்டன்), திலக் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகராஜன் (ராஜன் - ஆஸ்திரேலியா), விஜயலட்சுமி (ஜெயா- இளவாலை), காலஞ்சென்ற ஜெகராஜலட்சுமி (செல்லா - மல்லாகம்), இரத்தினலட்சுமி (பாப்பா - லண்டன்), ஈஸ்வரகுமார் (ஈசன் - லண்டன்), இரத்தினகுமார் (இரட்ணா - லண்டன்), சத்தியலட்சுமி (சத்தியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரரும், கணேஸ்வரி (கணேஷ் - லண்டன்) யின் உடன்பிறவா சகோதரனும், முருகதாசன் (இளவாலை), காலஞ்சென்றவர்களான அருமைநாயகம் (மல்லாகம்), திலகநாதன் (கொக்குவில்) மற்றும் விமலாதேவி (சந்திரா - ஆஸ்திரேலியா), சகுந்தலாதேவி (ஓட்டுமடம்), சற்குணராணி (அமெரிக்கா), சோமசுந்தரம் (சோமண்ணை - (லண்டன்), காலஞ்சென்றவர்களான இரவீந்திரன் (ரவி -பிரான்ஸ்), சண்முகநாதன் (கனடா), பஞ்சரஞ்சிதம் (ரஞ்சி - லண்டன்) மற்றும் சுகந்தி (லண்டன்), கலாவல்லி (கலா-லண்டன்), பாலகுமார் (லண்டன்) ஆகி யோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (ஓட்டுமடம்), குணசேகரம் (அமெரிக்கா), நாகேஷ்வரி (இலங்க), சிறீதேவி (கனடா) ஆகியோரின் அன்பு சகலனும், செந்தூரன் கண்ணா (ஆஸ்திரேலியா), வீணா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும், மயூராஜ் (ராஜ் - லண்டன்), நிரூபா (கனடா), கோகுலன் (கோபி), ராகுலன் (ரகு -பிரான்ஸ்), சுகிர்த்தா (சுகி - பிரான்ஸ்), கவிதா (லண்டன்) ஆகியோரின் தாய்மாமனும்,

லத்தீஷ் (லண்டன்), பகிரதன்(பகி) தனுஷன், அர்த்தணா, ஜெசிக்கா (லண்டன்), ஆகியோரின் பெரிய தந்தையும், வாணி (ஆஸ்திரேலியா), அலி (லண்டன்), ரமேஷ், சுரேஷ், டினேஷ் (கொக்குவில்), நிந்துஜா (இத்தாலி), நிருபா, நிரூஷா, நிரூஷன் (கனடா), பிருந்தா, லகஷ்சன் (லண்டன்)ஆகியோரின் அன்பு மாமாவும்,

ஓதிரை (பிரான்ஸ்), அபர்ணா (அபி - லண்டன்), சுபிதாசன் (சுபி - பிரான்ஸ்), ஆகியோரின் பெரியப்பாவும், சபேசன் (கனடா), சிவரோகினி (திருகோணமலை), காலஞ்சென்ற சற்குணராஜா (ராஜா), விஜிதா (பரந்தன்), ஜெயா (ஓட்டுமடம்), சசிகலா (ஜேர்மனி), உஷா, நிஷா (கனடா), பானு (அமெரிக்கா), நந்தபாலன் (பிரான்ஸ்), மணிவண்ணன் (கெருடாவில்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும்,

ராங்கா (குணா - திருகோணமலை), ரமேஸ்வரன்(பரந்தன்), ஸ்டாலின்போல் (கண்ணன் - ஓட்டுமடம்), லக்ஸ்மன் (ராஜ்) (ஜேர்மனி), ரொணேஷ் சிறி (கனடா), ஐங்கரன் (அமெரிக்கா), மேகலை (பிரான்ஸ்), சோபிகா (கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமாவும்,

ஸ்ரீஹரி (லண்டன்), யதூர்விவேகா, யதூர்விவேகன் (கனடா), இனயா, ஸ்ஷணா (பிரான்ஸ்) மாயா (லண்டன்) நிலு, நிரோ (திருகோணமலை), லிதுர்சன், குவேதினி (பரந்தன்) நிக்ஷனா (கனடா), நிலேஸ், வார்சா, சயாந்தன், சயாணா (கனடா), காருண்யா (ஜேர்மனி), அஜெய் (அமெரிக்கா), அக்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் - Divinity Funeral Care, 209 Kenton Road, HA3 OHD Wednesday 24th February 2021: 12.00 to 14.30. and Cremation: Address: Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London, NW7 1NB என்னும் இடத்தில் Wednesday 24th February 2021: 16.00 இடம்பெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**

(5870)

**தொடர்புகளுக்கு:**

- **இந்திரா** (மனைவி - லண்டன்) - 07977601060
- **தரன்** (மகன் - லண்டன்) - 07894342779
- **திலக்** (மகன் - லண்டன்) - 07522404871
- **ராஜன்** (சகோதரன் - ஆஸ்திரேலியா) - 0061414446250
- **ஜெயா முருகதாசன்** (சகோதரி - இளவாலை) - 0777755036
- **சோமண்ணை** (மைத்துனர் - லண்டன்) - 07424510991
- **ஈசன்** (சகோதரன் - லண்டன்) - 07734733100
- **இரட்ணா** (சகோதரன் - லண்டன்) - 07830444155
- **சத்தியா** (சகோதரி - பிரான்ஸ்) - 00 33664348073
- **ஜெயா** (பெறாமகள் - ஓட்டுமடம்) 0768078776
- **உஷா** (பெறாமகள் - கனடா) - 0014167496220

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.